விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

நாவாந்துறை
கிளை நூலகம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுன் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 08 புதன்கிழமை (25.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 310

## இடைக்கால அறிக்கை விவாதத்தின் போது

# மகிந்த ஆதரவு அணி ரகளையில் ஈடுபட முடிவு!

**(கொழும்பு) புதிய அரசமைப்பு தொடர்பான இடைக்கால அறிக்கை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 30-ம் திகதி ஆரம்பித்து நவம்பர் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. இக்காலப் பகுதியில் நாடாளு மன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் பெரும் போராட்டங்களை நடத்த மகிந்த ஆதரவு அணி கங்கணம் கட்டியுள்ளது.**

மகிந்த ராஜபக்ஷவை மையப் படுத்திய கூட்டு எதிர்க்கட்சி இடைக் கால அறிக்கையில் பிரிவினை இருப்பதாக குற்றம் சுமத்தி இடைக் கால அறிக்கையின் பிரதிகளை நாடாளுமன்றத்தில் தீயிட்டுக் கொளுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1996ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் போது இனப்பிரச்சினை தீர்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பிராந்தியங்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் என்ற யோசனை அடங்கிய பிரதிகளை அப்போது 23

## ஒரு மாதம் கடந்தது கைதிகள் போராட்டம்

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் மூவரும் உயிருக்கு ஆபத்தான நிலையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதுடன், அங்கிருந்தே அநுராதபுரம் அரசினர் வைத்திய 24

## விமலுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்கு குண்டுத் தாக்குதல் நடத்த வேண்டி ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெளியிட்ட அறிவிப்பு குறித்து உரிய நடவடிக்கை எடுக்க உள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சபாநாயகரின் ஊடகப் பிரிவு நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றின் அடுத்த அமர்வில் நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 03

## மகா நாயக்கர்களை சந்திக்க கூட்டமைப்பு தீர்மானம்!

(கொழும்பு)

மகாநாயக்க தேரர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானித்திருக்கின்றது.

உத்தேச அரசியல் யாப்பிற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள சியம், ராமான்ய மற்றும் அமரபுர ஆகிய மூன்று மதப் பிரிவுகளின் தலைமைப் பீடங்களும் 23

## ஜனவரி 27 தேர்தல்!

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்வது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலில் தான் கையெழுத்திடவுள்ளதாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா 23

## இந்து ஆலயங்களில் வேள்விக்கு முற்றாகதடை

### யாழ்.மேல் நீதிமன்று விதித்தது

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களில் மிருகங்களை பலியிடுவதற்கு முற்றாக தடையாணை உத்தரவு பிறப்பித்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன். இத்தடை உத்தரவை மீறுபவர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபருக்கு நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

இந்து கோவில்களில் வேள்வி பூஜை நடத்தப்படுவதற்கு 24

## எத்தடைகள் வந்தாலும் புதிய அரசியலமைப்பு வரும்

### டிலான் பெரேரா் சூளுரை



(கொழும்பு)

எந்தத் தடைகள் வந்தாலும் உத்தேச அரசியல் யாப்பைத் தயாரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான இராஜாங்க அமை 23

## ஜனாதிபதி மைத்திரி கட்டாருக்கு விஜயம்



(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை ஜனாதிபதி மைத்திரி 23

## பொலிஸாரின் அசாதாரண செயற்பாட்டால் யாழில் அதிகரிக்கும் குற்றச்செயல்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் மற்றும் வாள்வெட்டு கலாசாரத்தில் பொலிஸாரின் பங்கு அதிகளவில் காணப்படுவதாக சட்டத்தரணிகள் குற்றம் சாட்டியுள்ளனர்

யாழ். அரசடி வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு யாழ் மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் கோரப்பட்டது. அதன்போதே சில சட்டத்தரணிகள் 'மேற்குறித்த குற்றச்சாட்டினை முன் வைத்துள்ளனர்

அரசடி பகுதியில் உள்ள கடை ஒன்றில் புகுந்து கடை உரிமையாளரை வெட்டியதும் பின்னர் கடையை பெற்றோல் குண்டு வீசி தாக்கி சென்ற சம்பவம் தொடர்பாக ஒரு இளைஞனை பொலிஸார் கொழும்பில் கைது செய்திருந்தனர்.

அந்த இளைஞர் மீது 5 வழக்குகள் பதிவு செய்த பொலிஸார் அதில் கைக்குண்டு வைத்திருந்ததாகவும் ஒரு வழக்கை பதிவு செய்துள்ளனர்.

அந்த வழக்குக்கு பிணை விண்ணப்பம் செய்த சட்டத் 23

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழில் போராட்டம்



11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**WESTERN UNION WU**

moving money for better

உலகெங்குமுள்ள நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.

TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com



## விற்பனைக்கு

பஜாஜ் டிஸ்கவறி-100CC வகையைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**

**0772030309**

(1120)


# RAVEENS EMC

Singathin Veedu, Karaveddy East, Karaveddy

021 226 3321 info@raveensemc.com Web: www.raveensemc.com

Mr. P. Easwaranathan B.Sc (Hons) Ag. Dip. in. Edu.
Justice of the Peace
Director

## YEAR 06 Admission Test Results - 2018

| Date: | Index No | Name | School | Maths Rank | English Rank | Final Rank | Scholarship Marks |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | S.Abilash | J/M.V.V | 4 | 1 | **1** | 184 |
| 2 | 04 | T.Sankeerth | J/M.V.V | 1 | 2 | **2** | 180 |
| 3 | 27 | G.Mahelini | J/K.M.M.T.M.S | 2 | 12 | **3** | 178 |
| 4 | 35 | S.Amshani | J/Maniyaharan | 3 | 6 | **3** | 179 |
| 5 | 20 | N.Shangeeth | J/N.M.M.T.M.S | 4 | 10 | **5** | 174 |
| 6 | 31 | S.Anojan | J/Uduppidy AMC | 4 | 12 | **6** | 173 |
| 7 | 32 | V.Keerthishan | J/Thumpalai.S.M.V | 12 | 5 | **6** | 168 |
| 8 | 07 | K.Thiruparan | J/M.V.V | 16 | 2 | **8** | 183 |
| 9 | 15 | K.Vyshika | J/Melaipuloly | 14 | 4 | **8** | 170 |
| 10 | 12 | M.Mathupiriya | J/M.V.V | 7 | 12 | **10** | 169 |
| 11 | 33 | T.Thirshika | J/Sacred heart | 20 | 6 | **11** | 177 |
| 12 | 25 | N.Vithushani | J/K.M.M.TM.S | 7 | 18 | **11** | 182 |
| 13 | 06 | S.Mukunthapan | J/M.V.V | 9 | 16 | **13** | 165 |
| 14 | 08 | A.Ilakkiyan | J/M.V.V | 23 | 6 | **14** | 185 |
| 15 | 21 | S.Thapushalini | J/M.V.V | 23 | 9 | **15** | 170 |
| 16 | 29 | S.Abiram | J/M.V.V | 11 | 21 | **16** | 174 |
| 17 | 22 | S.Thushinth | J/Vetharaneswara | 23 | 12 | **17** | 165 |
| 18 | 23 | S.Sharujan | /Vetharaneswara | 14 | 21 | **18** | 162 |
| 19 | 34 | B.Sharavanan | J/Vadahindu pri | 29 | 10 | **18** | 162 |
| 20 | 18 | A.Nirusha | J/Vetharaneswara | 22 | 16 | **20** | 166 |
| 21 | 09 | S.Aaruthie | J/Thunnalai.K.V | 17 | 20 | **21** | 175 |
| 22 | 14 | K.Shahana | J/N.M.M.T.M.S | 17 | 24 | **22** | 166 |
| 23 | 05 | B.Abitha | J/Thunnalai.K.V | 9 | 33 | **23** | 164 |
| 24 | 01 | J.Amshapiragini | J/M.V.V | 20 | 26 | **23** | 176 |
| 25 | 03 | S.Archchitha | J/Thunnalai.K.V | 27 | 26 | **25** | 163 |
| 26 | 28 | S.Theiveehan | J/Thumpalai.S.M.V | 13 | 34 | **26** | 164 |
| 27 | 30 | P.Mahelini | J/M.V.V | 30 | 24 | **26** | 155 |
| 28 | 19 | P.Aranan | J/Thunnalai.K.V | 31 | 18 | **28** | 157 |
| 29 | 02 | R.Karisram | J/M.V.V | 17 | 32 | **29** | 156 |
| 30 | 26 | G.Pryanka | J/Thumpalai.S.M.V | 28 | 31 | **30** | 167 |
| 31 | 17 | P.Laxana | J/M.V.V | 33 | 23 | **31** | 167 |
| 32 | 36 | K.Kajaram | J/Thunnalai.K.V | 32 | 30 | **32** | 166 |
| 33 | 16 | S.Abinaya | J/Sacred heart | 34 | 28 | **33** | 160 |
| 34 | 24 | J.Abishan | J/Thunnalai K.V | 23 | 35 | **34** | 157 |
| 35 | 11 | K.Aathanan | J/M.V.V | 35 | 28 | **35** | 166 |

- **35 candidates sat for the Examination.**
- **31 candidates are called for an interview.**
- **Finally 25 candidates will be recruited.**

(சி-163)

## யா/வயாவிளான் மத்திய கல்லூரி-வயாவிளான் பழைய மாணவர் சங்கம்

## "வயவர்களின் சங்கமம்-2017"

## ஒன்றுகூடலும் இரவு விருந்துபசாரமும்

காலம்:-28.10.2017 சனிக்கிழமை

நேரம்:-மாலை 5.00 மணி

இடம்:-ஆ.சி.நடராசா அரங்கு

தலைமை

திரு.வி.ரி-ஜெயந்தன் (அதிபர்)

(தலைவர், பழைய மாணவர் சங்கம்)

பிரதம விருந்தினர்

செல்வி தர்சினி-சிவலிங்கம் (வயவன்)

(இலங்கை வலைப்பந்தாட்ட குழு முன்னாள் தலைவி)

பிரவேச அன்பளிப்பு:-தனி ஒருவர்-500/-

குடும்பம்-1000/-

"ஒன்றுபடுவோம் உயர்ந்து நிற்போம்"

கல்லூரி அன்னையின் வளர்ச்சி கருதி அனைத்து பழைய மாணவர்களையும் பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

**நுழைவு சீட்டு பெறுவதற்கு:-**

01.திரு.பொ.பத்மநாதன் (செயலாளர்)-0779771042

02.திரு.மு.கணேசானந்தன் (பொருளாளர்)-0779906043

03.திரு.இ.இராஜ்குமார் (உப தலைவர்)-0703777138

04.செல்வி.மு.ஜெகநந்தினி (ஆசிரியை, உறுப்பினர்)-0774322736

05.திரு.ஜ.சிவகுமார் (கொழும்பு கிளை செயலாளர்)-0777370687

**பழைய மாணவர் சங்கம்**

**யா/வயாவிளான் மத்திய கல்லூரி, வயாவிளான்** (சி-160)

## பேராசான் கலாநிதி பா.தனபாலன் அவர்களுக்கு (உப பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) "தேசிய இரத்தின தீப" விருது வழங்கியமையையிட்டு

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## (வடக்கு ஊடகக் கல்விக் கல்லூரி, மலையக கலை கலாசார சங்க ஏற்பாட்டில் நடைபெற்றது)




22.10.2017 அன்று வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் வர்த்தக, வாணிப அமைச்சர் கௌரவ ரிசாட் பதியுதீன் அவர்களால் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு.அப்துல் மப்ரூப், புத்தளம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.நாவி, அநுராதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு குசாக் ரகுமான், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திரு.காதர் மஸ்தான் ஆகியோர் மத்தியில் எமது பேராசான் கலாநிதி பா.தனபாலன் அவர்களுக்கு "தேசிய இரத்தின தீப" விருது வழங்கப்பட்டமைக்காக அவரைப் பாராட்டுகின்றோம்.



- யுத்தத்தால் பாதிப்புற்ற வன்னி மாணவர், இளைஞர்களுக்கான கல்வி, விழிப்புணர்வு முகாங்கள், தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறைகள்
- மக்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் தெருவெளி நாடகமூலமாக மறுவாழ்வுக்கான விழிப்புணர்வுகள், ஊடகங்கள் மூலமான கருத்தமைந்த செயற்பாடுகள்.
- அதிபர், ஆசிரியர், சமூகத்தினருக்கான களப்பயில்வுகள், ஆய்வுகள், வெளியீடுகள், புத்தாக்கங்கள்.
- எம் மண்ணில் வரையறுக்கப்பட்டிருந்த உயர் கல்வி ஆய்வுக் கலாசாரத்தை சர்வதேச தரத்திற்கு மாற்றி சமூகம் பயன்படும் வகையில் உருவாக்கி வரும் சிற்பி.
- திருகோணமலை, மட்டக்களப்பு மன்னம்பிட்டி, அநுராதபுரம், புத்தளம், மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் கல்வி, கலாசார பண்பாட்டெழுச்சி விழிப்புணர்வுச் செயற்திட்டங்களை அமைதியாக நிறைவேற்றும் கல்விப் போராளி, நடமாடும் பல்கலைக்கழகம்! இளைஞர்களை வலுவூட்டும் வளவாளனே! உம் சேவை தொடர வாழ்த்துவதுடன், உம்முடன் நாமும் மனிதத்துவ விடுதலைக்காக கல்வியைக் கருவியாக்குவோம்!

(1126)

## -பேராசானிடம் கல்வி கற்று உயர்ந்த மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாராளுமன்றம் மீது குண்டு போடுவேன்! விமலின் கருத்து தொடர்பில் விசாரணை

## சபாநாயகர் அலுவலகம் அறிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்த பாராளுமன்றம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்த கருத்து தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் அலுவலகம் அறிவித்துள்ளது.





அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது குறித்த விடயம் தொடர்பில் பாராளு மன்றத்தின் அவதானத்துக்கு கொண்டு வரப்படவுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்சவின் கருத்து தொடர்பில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. விமல் வீரவன்ச சிறையில் இருந்த போது எழுதிய நூல் கடந்த 22 ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றிய விமல் வீரவன்ச புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டால் குண்டு போட்டாவது அதைத்தான் தடுத்து நிறுத்துவேன் என்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொதுச்சேவை ஆணைக்குழு அதிகாரிகள் அசமந்தம்; வலம்புரி செய்தியையடுத்து ஆளுநர் கூடிய கவனம்

## முறைப்பாடு செய்யுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் இது வரையில் நடைமுறைப்படுத்தப்படாது இருப்பின் அது தொடர்பில் ஆளுநர் செயலகத்தில் முறைப்பாடு செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகள் அசமந்தப் போக்கு காட்டுவதாக நேற்றைய தினம் வலம்புரிப் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. குறித்த செய்தி தொடர்பில் ஆளுநர் கூடிய கவனம் செலுத்துவதாக தெரிவித்து தனது அலுவலகத்திலிருந்து நேற்று ஊடகங்களுக்கு அறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த அறிக்கையில், கடந்த ஆவணி மாதம் புதிதாக ஆளுநரால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களை கொண்ட பொதுச்சேவைகள் ஆணைக்குழு இற்றைவரையில் ஏறத்தாழ 150 பிரச்சினைகளுக்கான தீர்வினை கண்டறிந்துள்ளது. ஆயினும் இவற்றில் பல சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டும் நடைமுறைப்படுத்தப்படாது இருப்பதாகவும் அதிகாரிகள் தாமதம் காட்டிவருவதாகவும் அறியமுடிகின்றது. எனவே இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் உரியவர்களை அழைத்து தகவல்களை திரட்டி தீர்மானங்கள் செயற்படுத்தப்படாது கிடப்பில் போடப்பட்டிருப்பது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட பொதுச்சேவை ஆணைக்குழு திறம்பட தனது பணியினை ஆற்றிவரும் நிலையில் அதிகாரிகளின் அசமந்தப் போக்கு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

மேலும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படாது இருப்பின் அது தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறும் ஆளுநர் செயலகத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதாவது நியமனம் வழங்கி 3 வருடங்கள் நிறைவடைந்துள்ள போதும் பதவியை உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்காது இருப்பது, சேவை குறிப்பு பிரமாண குறிப்பு தயாரிப்பதில் தாமதம்/ ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் செய்யப்படாது இருத்தல், உள்ளக பதவி உயர்வுகள் உரிய காலத்தில் நிறைவு செய்யப்படாது இருத்தல், வருடாந்த இடைக்கால உள்ளக மற்றும் மாகாண இடமாற்ற கொள்கைகளில் சரியான கொள்கைகளை கடைப்பிடிக்காமை, தற்போது இருக்கின்ற வெற்றிடங்களை நிரப்புவதில் உரிய கவனம் செலுத்தாது இருத்தல், உத்தியோகத்தர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மீது செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் உரிய காலப் பகுதியில் கவனம் செலுத்தப்படாது இருப்பது, உரிய காலப் பகுதிக்குள் நடத்தப்பட வேண்டிய வினைத்திறன் பரீட்சைகளை நடத்துவதில் காலதாமதம் ஏற்படல், அலுவலகப் பணியாளர் / சிறு பணியாளர்களின் உள்ளக இடமாற்றம் மாகாணத்திற்கு அப்பால் இடமாற்றம் என்பவற்றினை இதுவரையில் மேற்கொள்ளாதிருப்பது மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தல் வேண்டும் என ஆளுநரினால் உரிய திணைக்களங்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதுதொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின் ஆளுநர் செயலகத்திற்கு அறியத்தருமாறு மேற்குறித்த ஊடக அறிக்கையினூடாக வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-4-9-60)

## வைத்திய சபையின் அவசர கூட்டம்

(கொழும்பு)

இலங்கை வைத்திய சபை யின் அவசர கூட்டம் இன்று இடம்பெறும். இன்று பிற்பகல் ஒரு மணியளவில் வைத் திய சபையின் உறுப்பினர்க ளுக்கு குறித்த சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு அழை ப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தம்மால் சமர்ப்பிக்கப்ப ட்ட, இலங்கை வைத்திய கல்விக்கான குறைந்த பட்ச தகுதி தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ள தாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தலை மையில் இடம்பெற்ற கலந்து ரையாடலைத் தொடர்ந்தே, இலங்கை வைத்திய சபை, இன்று அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் நேற்று முன்தினம் சந்திப்பின் போது, வைத்திய சபையால் முன்வைக்கப்பட்ட, மருத்துவக் கல்விக்கான குறைந்த பட்ச தகுதி தொடர் பில் திருத்தங்களை மேற்கொண்டு, அதனை வர்த்த மானியில் பிரசுரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

## வேலையற்ற பட்டதாரிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் இன்று கொழும்பு புறக்கோட்டை மத்திய ரயில் நிலையத்திற்கு முன்பாக முற்பகல் 11 மணியளவில் நடத்தப்படும் என்று ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வெளி யிட்ட அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்குவர முன்னர் தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது. (இ-7)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நேற்றும் கையெழுத்துப் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் துரிதமான விடுதலையை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்துப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. மேற்படி கோரிக்கையை முன்வைத்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 20 ஆம் திகதி முதல்வகுப்பு பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

தமது வழக்குகளை அநுராதபுரம் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மீளவும் மாற்றுமாறு கோரி அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளான இராசதுரை திருவருள் (வயது-40), மதியரசன் சுலக்சன் (வயது-30), [illegible] போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களது உடல்நிலை மோசமானதை தொடர்ந்து குறித்த கைதிகளது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி அவர்களது உண்ணா விரதப் போராட்டத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி யாழ்பல்கலைக் கழககலைப் பீட மாணவர்களால் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட் டம் ஒன்று கடந்த 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. எனினும் குறித்த போராட்டத்தை நிறுத்துமாறும், தான் ஜனாதி பதியை சந்திக்க ஏற்பாடு செய்து தருவதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே மாணவர்களிடம் கூறியிருந்தார்.

இதனையடுத்து மாணவர்களது உண்ணாவிரதப்போராட்டம் கைவிடப்பட்டு, மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் மற்றும் மாணவ ஆலோசகர்கள் ஆகியோர் கடந்த 19 ஆம் திகதி ஜனாதிபதியை சந்தித்திருந்தனர். இதன் போது கைதிகள் விடயத்தில் உடனடியாக முடிவு எடுக்க முடியாது எனவும் நீதியமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் நாடு திரும்பியவுடன் அவர்களுடன் கலந்துரையாடி ஒருவாரத்திற்குள் சாதகமான தீர்வொன்றை பெற்றுத் தருவதாகவும் கூறியிருந்தார்.

எனினும் கைதிகளது உடல்நிலை மிகமோசமாக பாதிக்கப்பட்ட நிலையில், ஜனாதிபதியுடனான சந்திப்பு திருப்தியற்றது எனவும், அவர் கைதிகளுடைய உடல் நிலையை பொருட்படுத்தாமல் தம்மோடு கலந்துரையாடியதாகவும், ஜனாதிபதி இந்த விடயத்தில் காலம் தாழ்த்தாது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி தொடர் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட போவதாகவும் 20.10.2017 அன்று பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மாணவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து மாணவர்கள் கடந்த 20 ஆம் திகதி முதல் தொடர் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். மேலும் தம்முடனான சந்திப்பின் போது ஜனாதிபதி வாக்களித்தது போன்று ஒரு வாரத்திற்குள் சாதகமான தீர்வொன்றை பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி நேற்று முன்தினம் முதல் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தனர். இந்த போராட்டமே நேற்றும் வடக்கில் பிரதான நகரங்களில் நடைபெற்றன. இதவேளை அரசியல் கைதிகளின் போராட்டம் நேற்று 30 ஆவது நாளாகவும் தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வரூபம் எடுக்குமா இந்தியா?

## 2வது போட்டியில் நியூசிலாந்துடன் இன்று புனேயில் மோதல்



இந்தியா-நியூசிலாந்து அணிகள் மோதும் 2ஆவது ஒரு நாள் போட்டி இன்று புனேயில் நடக்கிறது. இதில் வென்றால் மட்டுமே தொடரை தக்க வைக்க முடியும் என்ற இக்கட்டான நிலையில் இந்திய அணி களமிறங்குகிறது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள நியூசிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங் கேற்கிறது. முதல் போட்டியில் நியூசி லாந்து வெற்றி பெற்றிருந்த நிலையில் 2ஆவது போட்டி புனேயில் இன்று நடக்கிறது.

கடந்த போட்டியில் இந்திய அணி யாரும் எதிர்பாராத வகையில் அதிர்ச்சி தோல்விய டைந்தது. ஆபத்தான ஆரம்ப ஜோடியான ரோகித், தவான் சொற்ப ஓட்டங்களில் வெளி யேறினர். தனது 200ஆவது ஒரு நாள் போட்டியில் அணித் தலைவர் ஹோலி சதம் அடித்தும் பலன் இல்லாமல் போனது. இங்கிலாந்துக்கு எதிராக இதே புனே மைதானத்தில் தான் இவர், 122 ஓட்டங்கள் விளாசினார். இன்றும் ஹோலி விஸ்வரூபம் எடுத்தால், நியூசிலாந்து அணி அலறி அடித்து ஓடுவது நிச்சயம்.

நான்காவது இடம்தான் தலைவலியாக உள்ளது. மணிஷ் பாண்டே, ஜாதவ் என யாரை களமிறக்கினாலும் 'செட்' ஆக வில்லை. 'சீனியர்' வீரர் தினேஷ் கார்த்திக் பொறுப்புடன் செயல்பட்டார்.

### சோதிக்கும் தோனி

கடந்த முறை தோனி 42 பந்தில் 25 ஓட்டங்கள்தான் எடுத்தார். இப்படி ரசிகர் களின் பொறுமையை சோதிப்பதை இவர் கைவிட வேண்டும். ஹர்திக் பாண்ட்யா ஏமாற்றினாலும் பந்துவீச்சாளர் புவனேஷ்வர் நம்பிக்கை அளித்தார். துடுப்பாட்டக்காரர்கள் பொறுப்பாக ஆடினால் மட்டுமே தொடரை இழக்கும் அபாயத்திலிருந்து இந்தியா தப்ப முடியும்.

### ஏமாற்றிய 'சுழல்'

கடந்த போட்டியில் சுழற்பந்துவீச்சாளர் குல்தீப், சகால் ஏமாற்றினர். புவனேஷ்வர், பும்ராவின் வேகமும் எடுபடவில்லை. இன்று ஒட்டுமொத்த பந்துவீச்சுக் கூட்டணியும் எழு ச்சி பெற வேண்டும்.

### ஆபத்தான ஜோடி

நியூசிலாந்து அணிக்கு கப்டில், முன்ரோ சிறப்பான ஆரம்பத்தை கொடுத்தனர். முதல் போட்டியில் அணித் தலைவர் வில்லியம் ஸன் சொதப்பினாலும், ரோஸ் ரெய்லர், ரொம் லெதம் கைகொடுத்தனர். 'சுழல்' பந்துவீச்சை குறி வைத்து தாக்கினர். சத நாயகரான லெதம் மீண்டும் அனாயசமான திறமையை வெளிப்படுத்தலாம்.

### போல்ட் அபாரம்

வேகப்பந்துவீச்சில் பவுல்ட், சௌதி மாறி மாறி தாக்குதல் தொடுத்தனர். 10 ஓவர்களில் 4 விக்கெட் வீழ்த்திய போல்ட் ஓட்டம் வழங்குவதிலும் சிக்கனமாகவே இருந்தார். இன்று சான்ட்னருடன் 'சுழல்' வீரர் சோதியும் கைகோர்த்து இந்திய அணிக்கு சிக்கல் தர முயற்சிக்கலாம்.

தொடரை கைப்பற்ற நியூசிலாந்தும் தக்க வைத்துக் கொள்ள இந்தியாவும் ஆக்ரோஷ மாக போராடும் என்பதால் விறுவிறுப்பான ஆட்டம் ரசிகர்களுக்கு காத்திருக்கிறது.

### மழை வருமா?

போட்டி நடக்கும் புனே நகரின் இன்றைய வெப்பநிலையை பொறுத்தவரை அதிகபட் சம் 32, குறைந்தபட்சம் 19 டிகிரி செல்சியாக இருக்கும். மழை வர வாய்ப்பு இல்லை.

### முதல் முறை

புனேயில் உள்ள மகாராஷ்டிரா கிரிக் கெட் சங்க மைதானத்தில் இரு அணிகளும் முதல் முறையாக ஒரு நாள் போட்டியில் மோத உள்ளன.

### ஆடுகளம் எப்படி?

புனே ஆடுகளம் ஓட்ட குவிப்புக்கு ஒத்து ழைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 2013க்குப்பின்...

பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த 2012 டிசம்பர் 30 (சென்னை) மற்றும் 2013 ஜனவரி 3ல் (கொல்கத்தா) நடந்த போட்டி களில் அடுத்தடுத்து இந்தியா தோல்வியை சந் தித்தது. இன்றும் இந்திய அணி ஏமாற்றி னால், 2013க்குப்பின் சொந்த மண்ணில் தொடர்ந்து இரண்டு ஒரு நாள் போட்டிகளில் முதல் முறையாக தோற்க வேண்டிய நிலை ஏற்படும்.

### தொடருமா?

இந்திய மண்ணில் இரு அணிகளும் இதுவரை 5 தொடரில் (1988,95, 99, 2010, 16) விளையாடி உள்ளன. இதில் அனைத் தையும் வென்று இந்திய அணி ஆதிக்கம் செலுத்துகிறது. இந்த வெற்றிநடையை தொடர, இன்று இந்திய வீரர்கள் துடிப்பாக விளையாட வேண்டும் .

5ஆவது தடவையாக சிறந்த வீரர் விருதை

# தட்டிச் சென்றார் ரொனால்டோ



'பிபா' சிறந்த வீரருக்கான விருதை கால் பந்து சுப்பர்ஸ்ராரும் ரியல் மட்ரிட் கழக வீரரு மான கிறிஸ்டியானோ ரொனால்டோ தட்டிச் சென்றார்.

கால்பந்து அரங்கில் சிறந்து விளங்கும் நட்சத்திரத்திற்கு கடந்த 1956 முதல் ஆண்டு தோறும் சிறந்த வீரர் விருது வழங்கப்படுகி றது. இதை பிரான்ஸை சேர்ந்த 'பிரெஞ் புட் போல்' என்ற பத்திரிகைதான் தொடங்கியது. பின், சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு ('பிபா') இணைந்தது. இவர்களுக்கு இடையி லான ஒப்பந்தம் கடந்த ஆண்டு முடிவடைந்து விட்டதால், இரு அமைப்பும் தனியாக விருது வழங்கி வருகிறது.

இதன்படி, 'பிபா' சார்பில் வழங்கப்படும் சிறந்த வீரர் விருதுக்கான உத்தேச பட்டிய லில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சி (பார்சி லோனா), போர்த்துக்கலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ (ரியல் மட்ரிட்) உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். இதிலிருந்து சிறந்த வீரரை தேர்வு செய்ய வாக்கெடுப்பு நடந்தது.

### ரொனால்டோவுக்கு கௌரவம்

இதில் அணி பயிற்சியாளர்கள், அணித் தலைவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பத் திரிகையாளர்கள் பங்கேற்றனர். இவர்க ளுடன் இணையதளத்தில் ரசிகர்களும் வாக் களித்தனர். லண்டனில் நடந்த விருது வழங் கும் விழாவில், 43.16 சதவீத வாக்குகள் பெற்ற கிறிஸ்டியானோ ரொனால்டோ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். கடந்த ஆண் டும இதே விருதை ரொனால்டோ வென்றிருந் தார். ஒட்டுமொத்தமாக ஐந்தாவது முறை யாக (2008, 13, 14, 16, 17) விருதை கைப்பற் றினார். இந்த ஆண்டு ரொனால்டோவுக்கு சிறப்பானதாக அமைந்தது. லா லிகா மற்றும் சம்பி யன்ஸ் லீக் என இரண்டு தொடரிலும் இவரது ரியல் மட்ரிட் அணி பட்டம் வென்றது.

### மெஸ்சி 2ஆவது இடம்

மற்றைய நட்சத்திர வீரர்களான மெஸ்சி (19.25%), நெய்மர் (6.97%, பாரிஸ் செயி ண்ட் ஜெர்மைன்) முறையே 2, 3ஆவது இடம பிடித்தனர். சிறந்த வீராங் கனையாக நெதர் லாந்தின் லிகா மார்டின்ஸ் (பார்சிலோனா) தேர்வு செய்யப்பட்டார். சிறந்த பயிற்சியாளர் விருதை மட்ரிட்டின் ஜிடேன் தட்டி சென்றார். சிறந்த கோல் காப்பாளர் விருதை யுவான் டஸ் கழக வீரர் (இத்தாலி) புபான் வென்றார்.

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### 2017ம்/2018ம் ஆண்டுக்கு தொழிலாளர்களை வழங்கும் ஒப்பந்தகாரரை பதிவு செய்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் தொழிலாளர் சேவையை வழங்குவதற்கு விரும்பும் ஒப்பந்தக்காரரை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 06.11.2017ம் திகதி வரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். பதிவுக்கான விண்ணப்பங்களை யாழ்.மாநகர சபை, பொறியியலாளர் பகுதியில் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். பதிவுக் கட்டணமாக ரூபா. 1,000.00 + வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

| இல. | வேலை விபரம் I | கூலி ஒருவருக்கானது (2017 - 2ம் அரை ஆண்டுக்கானது) II | சராசரியாக ஒரு தடவையில் வழங்கக் கூடிய தொழிலாளர் எண்ணிக்கை III |
|---|---|---|---|
| 1 | பயிற்றப்படாத தொழிலாளர்கள் (Un skilled - Male) | 1150.00 | ... |
| 2 | பயிற்றப்படாத தொழிலாளர்கள் (Un skilled - Female) | 1050.00 | ... |
| 3 | பகுதியளவில் பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் (Semi skilled) | 1250.00 | ... |
| 4 | பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் (Skilled Grade II) | 1350.00 | ... |
| 5 | சாரதி (உழவு இயந்திரம், கனரக வாகனம் செலுத்த) (Skilled Grade II) | 1350.00 | ... |

I. வேலை அனுபவமுள்ள தொழிலாளர்கள்

II. யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் ஆறு மாதங்களுக்கொருமுறை நிர்ணயிக்கப்படும் எட்டு மணி வேலைக்கான ஒரு நாட் கொடுப்பனவு (குறிப்பிடப்பட்டுள்ளது)

III. சேவை வகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒரே நேரத்தில் வழங்கக்கூடிய சராசரித் தொழிலாளர்களின் எண்ணிக்கை.

**திரு.பொ.வாகீசன்**
ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-159) 25.10.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகிரங்க ஏல விற்பனை - 2017**

இடம் : யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை | காலம் : 06.11.2017 | நேரம் : மு.ப 9.00 மணி

பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆசிரியர் மேசை | - 04 | High Jumb Bar | - 01 |
| இரும்புப் பைப் 22' | - 02 | மண்வெட்டி | - 04 |
| இரும்புப் பைப் 15' | - 01 | உருக்கு கோவைகபினற் | - 01 |
| Computer Table | - 01 | அலவாங்கு | - 01 |
| Computer Chair | - 04 | குக்கர் பெரிது | - 01 |
| UPS | - 01 | கோடரி | - 01 |

(1115) அதிபர்

**வைத்தியம்**

நோய் எதுவாயினும் தீர்வு உண்டு. தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டுப் பிரச்சினை, பாரிச வாதம், சலரோகம், உடற்பருமன் குறைத்தல் (வயிறு/மார்பு/கை) அல்லது கூட்டுதல், ஆண் மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு மருந்தின்றி பக்கவிளை வின்றி அக்குபன்சர் சிகிச்சை வழங்கப்படும். (1041)

தொடர்பு: (ACU) Dr. Sanker | T.P: 077 035 7307

# வாகனங்களின் தர நிர்ணய சோதனையில் 11 ஆட்டோக்கள் முல்லைத்தீவில் அகப்பட்டன

(முல்லாவி)

தேசிய போக்குவரத்து அமைச்சின் கீழுள்ள முல்லைத்தீவு மாவட்ட போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினரும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொலிஸாரும் இணைந்து முல்லைத்தீவு நகரப் பகுதியில் திடீரென வாகனாங்களின் தர நிர்ணய பரிசோதனையை மேற்கொண்ட போது, போக்குவரத்து சட்ட விதிகளுக்கு முரணாக காணப்பட்ட 11 ஆட்டோக்கள் மாட்டிக் கொண்டன.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வரும் பேருந்துக்கள், ஆட்டோக்கள் என்பன தொடர்பில் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற குற்றச்சாட்டையடுத்து விசேட வாகன தர நிர்ணயப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, ஆட்டோக்களில் பயணிகளுக்கு சிரமங்களை ஏற்படுத்தும் வகையில் அலங்கரிப்புக்களை மேற் கொண்டிருந்த ஆட்டோக்கள், ஆட்டோக்களின பின் ஆசனத்தில் அமர்ந்து பயணிக்கும் பயணிகளை உற்று நோக்கும் வகையில் ஆட்டோ முன் பகுதியில் கண்ணாடிகளைப் பொருத்திய ஆட்டோக்கள் உட்பட ஆட்டோக்களில் அதிக ஒலியை எழுப்பும் ஒலி பெருக்கி சாதனங்களையும் ஒலி சமிக்ஞைக் கருவி, மின் குமிழ்கள், அலங்கரிப்பு உட்பட பல்வேறு வ்கையான போக்குவரத்து ஊர்திச் சட்ட விதிகளுக்கு முரணாக காணப்பட்ட ஆட்டோக்களே மாட்டிக் கொண்டன.

இவை தொடர்பில் குற்றப்பத்திரம் வழுங்கப்பட்டு மீளவும் போக்குவரத்து சட்ட விதிகளுக்கு அமைய ஆட்டோக்களை சீர் செய்ய கால அவகாசம் வழுங்கப்பட்டுள்ளது.

அதற்கும் தவறும் பட்சத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்படவுள்ளது.(2-15)

# தமிழ் மொழியில் பாண்டித்தியம் அவசியம்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு


(கொழும்பு)

எம் எல்லோரையும் பிணைப்பது எமது மொழியே. எனவே தமிழ் மொழியில் பாண்டித்தியம் அடைவது இன்றியமையாதது என வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவ்மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி என்பது வேப்பங்காயாக இல்லாமல் தேனாக இனிக்க வேண்டுமானால் இவ்வாறான மறுபரிசீலனை எமக்கு ஒரு தன்னம்பிக்கையை ஊட்டும். அந்தத் தன்னம்பிக்கை மகிழ்வைத் த்ரும். அதேநேரம் எழுது நாளாந்த வாழ்க்கையும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.



அடுத்து பிழையில்லாமல் எழுதப், பேசப் பழகிக் கொள்ள வேண்டும். இன்று எமது பிள்ளைகளுக்கு லகர ளகர ழகர வேறுபாடுகள் தெரிவதில்லை. ன, ந, ண, போன்றவற்றின் வேறுபாடு தெரிவதில்லை. சின்ன வகுப்புக்களிலேயே பாடங்களை முறையாக எழுத்துக் கூட்டி வாசிப்பதால் எழுத்துப் பிழைகளற்ற சொல் வடிவங்களில் பரீட்சயப்பட எமக்கு முடிகின்றது.

முன்பு வானொலி ஒலிபரப்புக்களில் பேசப்படுகின்ற தமிழ் இலக்கியநடை நிறைந்ததாக முறையான உச்சரிப்புடன் கூடியதாக அமைந்திருக்கும் ஆனால்இப்போதோ வானொலிப் பெட்டியை அல்லது தொலைக்காட்சிப் பெட்டியை திருப்பினால் அங்கு பேசப்படுகின்ற தமிழை எப்படி வர்ணிப்பதென்று எமக்குப் புரியவில்லை. திரைப் படங்கள் சில கூட இவ்வாறான பிழைகளை விட ஊக்கு விக்கின்றன.

அவர்களின் பேச்சில் ஆங்கிலம் அறுபது சதவீதம் தமிழ் நாற்பது சதவீதம் என்று கூறப்படுகின்றது. தமிழ் கொல்லப்படுகின்றதா? என்று ஏங்க வேண்டியுள்ளது. இன்றைய நிலை நீடித்தால் இருபது வருடங்களில் Tamlish என்ற ஒரு புதிய மொழி சென்னை போன்ற நகரங்களில் உற்பத்தியாகிவிடும் என்று மொழி வல்லுநர்கள் அபிப்பிராயப் படுகின்றார்கள்.

எனவே மொழிக்கல்வியில் நீங்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டும். எம் எல்லோரையும் பிணைப்பது எமது மொழியே. அந்த மொழியில் பாண்டித்தியம் அடைவது இன்றியமையாதது. அதே போன்று கணிதம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு போன்ற பாடங்களிலும் நீங்கள் கூடிய கவனம் செலுத்துவதன் மூலமே உலகைப் பற்றியும் எம்மைப் பற்றியும் எமது சூழலைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியும்.

எம்மைப் பற்றியும் சூழலைப் பற்றியும் எமது அரசியல் நிலைமை பற்றியும் அறிந்து கொண்டால் மட்டுமே எமது வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்ள முடியும். பரந்த அறிவு இன்று எம் எல்லோருக்கும் தேவைப்படுகின்றது. அந்தப் பரந்த அறிவைப் பெறுவதற்கு கணனியறிவு போதுமான அனுசரணை வழங்கிவருகிறது. கற்றல் எனும் பதத்திற்கு ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடில்லை. கறுப்பு, சிவ ப்பு என்ற வேறுபாடில்லை. உயரம், பதிவு என்ற வித்தி யாசமில்லை என்பதை மனதில் நிலைநிறுத்தி கல்வியில்கூடியகவனத்தைசெலுத்த வேண்டும் என மேலும் தெரி வித்தார். (இ-9)

# நவீனரக வாகனத்தை வாடகைக்கு பெற்றுக் கொண்ட நபர் தலைமறைவு

(கொழும்பு)

நவீனரக வாகனம் ஒன்றை வாடகைக்கு பெற்றுக்கொண்ட நபர் வாகனத்துடன் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொஸ்வத்தை பொலிஸ் பிரிவில் வசிக்கும் பெண் ஒருவர் தனது சுமார் 45 இலட்சம் ரூபா பெறுமதி யான வான் ஒன்றை ராகமை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் மாதமொன்றுக்கு 90 ஆயிரம் ரூபா வாடகை ஒப்பந்தத்துடன் வழங்கியுள்ளார்.

முதல்மாதம் உரிய முறையில் வாடகை வழங்கப்படாததால் குறித்த பெண் குறித்த நபருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட போதிலும் அவரோடு தொடர்பு கொள்ள முடியாது போயுள்ளது.

இதனையடுத்து அப் பெண் தனது கணவருடன் அந்நபரைத் தேடி அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அங்கு அந்நபர் குடியிருந்த வாடகை வீடும் பூட்டப்பட்டிருந்ததால் இது தொடர்பில் ராகமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதன் போதே குறித்த நபர் பற்றிய தகவல்கள் தெரிய வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தொடர்பில் தேடிப் பார்த்த போது அவர் பல கோடி ரூபா பெறுமதியான நவீன ரக வாகனங்கள் பலவற்றை மாத வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டு அவ்வாகனத்துடன் காணாமல் போயுள்ளமை தொடர்பில் அந்த வாகனங்களின் உரிமையாளர்களும் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த நபர் கந்தானை பிரதேசத்தில் வாடகை வீடொன்றில் வசித்து வந்துள்ளார். குறித்த வீட்டின் உரிமையாளருக்கு வீட்டு வாடகையை வழங்காமல் அவ்வீட்டிலிருந்து சென்றுள்ளமை தெரிய வந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பிணைமுறி மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

பிணைமுறி மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது தடவையாக மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆணைக் குழு வின் பதவிக் காலம் மேலும் ஆறு வாரங்களுக்கு நீடிக் கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியில் இடம் பெற்றதாகக்கூறப்படும்பிணைமுறி மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவினால் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டிருந்தது.

மூன்றாவது தட வையாக ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என சட்டமா அதிபர் திணைக் களம் அறிவித்துள்ளது.

விசாரணைகளைப் பூர்த்தி செய்ய போதியளவு கால அவகாசம்தேவைஎனஆணைக்குழு கோரியுள்ள நிலையில் இந்தக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் 27 ஆம் திகதியுடன் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் பூர்த்தியடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. உச்ச நீதிமன்ற நீதியரசர்களான ரீ.கித்சிறி, பிரசன்ன சஞ்சீவ ஜயவர்தன மற்றும் முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் கந்தசாமி வேலுப்பிள்ளை ஆகியோர் இந்த ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராசி பலன்

25.10.2017
ஐப்பசி 08, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பஞ்சமி முற்பகல் 8.22 மணிவரை
மூலம் முன்னிரவு 8.05 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
உலக ஐக்கிய நாடுகள் தினம்,
ஸ்கந்த சஷ்டி விரதம்

வளவன்

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**இடபம்:** அல்லல்கள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலம் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**கும்பம்:** மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடும் நாள், எதிர்பார்த்த தனவரவு வந்து சேரலாம், காரிய நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்:** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை நீங்கள் இன்று செய்து முடிப்பீர்கள்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமைகள் கூடும் நாள், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கார்த்திகை, ரோகினி | | ராகு |
| கேது | | | |
| | சனி | சூரி, புத, குரு | செவ் சுக் |

**தனுசு:** விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், சவால்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், தொழில் விருத்தியுண்டு.

**கன்னி:** கடன் சுமை குறையும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தின் தலைவர் ஆ. இரவீந்திரன் கலந்து கொண்டார்.



பிரம்மஸ்ரீ ம.ஜெயராமசர்மாவின் 'பன்முகம்' நூல் வெளியீட்டு விழா சமஸ்கிருத துறை ஏற்பாட்டில் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கத்தில் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் சின்மயாமிஷன் சுவாமிகள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் ஆசி வழங்கினர். பேராசிரியர் சி.சிவலிங்கராஜா வெளியீட்டுரையையும் சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் இரா.இராஜேஸ்கண்ணன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தினர். முதல் பிரதியை ஸ்ரீமதி கலாவதி பிரகதீஸ்வரக்குருக்கள் பெற்றுக்கொண்டார்.

## சர்வதேச முதியோர் தினம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தின் சர்வதேச முதியோர், சிறுவர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தினம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கா. முகுந்தன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி க.திரவியராஜா மற்றும் முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தரும் மாவட்ட இணைப்பாளருமான இ.அமலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-19)

## இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு; பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

(கரணவாய்)

துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ் சந்தேக நபர்கள் இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி குடத்தனைப்பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒவர் பலியானார்.

இது தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளபொலிஸ் சந்தேக நபர்கள் இருவரையும் நேற்று (23/10/2017) நீதிமன்றில் முற்படுத்தியபோது மீளவும் 27.10.2017 வரை விளக்கமறியலில்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)

## 'காந்தீயம்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான காந்தீயம் பத்திரிகையின் ஒக்டோபர்-நவம்பர் இதழ் வெளிவந்துள்ளது.

148 ஆவது காந்தி ஜெயந்தி தின சிறப்பிதழாக வெளிவந்துள்ள இவ்விதழில் கா.கார்த்திகேசு எழுதிய 'சத்தியத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து உலக சரித்திரத்தில் முதலிடம் பிடித்தவர் மகாத்மா காந்தி' என்ற கட்டுரையும் க.செல்வக்குமாரன் எழுதிய இங்கிலாந்து சைவ உணவாளர் சங்கத்தையும் காந்தியடிகளின் சைவபோசனத்தையும் பற்றிய கட்டுரையும் மூதறிஞர் ஆ.சபாரத்தினம் காந்தியவாதி சி.க.வேலாயுதபிள்ளையுடனான தனது அனுபவங்களைபகிர்ந்துகொள்ளும் ஆக்கமும் சிவரம்யா சிவநாதன் எழுதிய 'தூய்மை வாழ்க்கையின் நடமாடும் ஓவியமாகத்திகழ்ந்தவர் அண்ணல் காந்திஜி' என்ற கட்டுரையும் கவிஞர் மணிமன்றனின் 'மனிதருள் மாணிக்கம்' என்ற கவிதையும் இடம்பெற்றுள்ளன.

இவ்விதழின் பிரதியொன்றை இலவசமாகப் பெற விரும்புவோர் தமது சுயமுகவரி எழுதப்பட்ட ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், காந்தீயம், இல 151, சென். பெனடிக்ற் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியுமென்று அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பொதுச் செயலாளரும் காந்தீயம் ஆசிரியருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார். (இ

# கன்னியர் மடம் வீதியில் கழிவுகளால் அசௌகரியம்

## மூன்று மாதங்களாக அகற்றப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட யாழ்.கன்னியர் மடம் வீதியில் மூன்று மாத காலமாக கழிவுகள் அகற்றப் படாது இருப்பதால் அவ்விடத்தில் துர்நாற்றம் வீசுவதுடன் பொதுமக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.



யாழ்.கன்னியர்மடம் வீதியின் ஓரத்தில் குப்பைகளை ஒரு சிலர் வீசி வந்துள்ளனர். அதனைத் தொடர்ந்து அப்பகுதி முழுவதும் தொடர்ச்சியாக கழிவுப் பொருட்களை வீசுவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

மேலும் கடந்த மூன்று மாத காலமாக அப்பகுதிக்கு மாநகர சபையினர் கழிவுப் பொருட்களை ஏற்றுவதற்கு வரவில்லை. இதனால் அவ்விடம் கழிவுகளைப் போடும் இடமாக மாறியுள்ளது.

தற்போது டெங்கு பரவும் சூழல் அதிகரித்து காணப்படுவதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் நன்மைகருதி அங்கு தேங்கியுள்ள கழிவுகளை யாழ்.மாநகர சபையின் சுகாதார பகுதியினர் கவனத்தில் கொண்டு அகற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)




## சூரன்போர்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பவ்குரு முருகன் ஆலய சூரன் போர் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் விசேட மேளக் கச்சேரி மற்றும் வாண வேடிக்கையுடன் இடம்பெறும். (இ-10)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் அ.ஆனந்தராஜா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் திருமதி ம. சுபாஜினி, சிறப்பு விருந்தினராக யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-136)

# இளையோரின் வேலைவாய்ப்புக்காக யாழில் மாபெரும் தொழிற்சந்தை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணமாவட்டச்செயலகமும் தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து யாழ்.மாவட்டத்தில்வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர்- யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் முகமாக மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு ஒன்றினை, எதிர்வரும் 28.10.2017ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தவுள்ளன.

இத் தொழிற்சந்தை நிகழ்வில் உள்நாட்டு தொழில் வெற்றிடங்களுக்கான ஆளணியினரை தேர்வு செய்வதற்காக [illegible] ங்கள், தொழிற்பயிற்சியினை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தி நிறுவனங்கள் வருகைதரவுள்ளன.

எனவே தொழில்வாய்ப்பிற்காக காத்திருக்கும் அனைவரும் இவ் அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாது உரிய நேரத்தில் தங்கள் சுயவிபரக் [illegible] பற்றி [illegible] வேலைவாய்ப்புக்கள், தொழிற்பயிற்சி வாய்ப்புக்களை பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இச் சேவையினூடாக தங்களுக்கான ஆளணியினரை பெற்றுக்கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் மேலதிக விபரங்களை பெற விரும்புவோர் 021 221 9359 என்ற அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

## அனுபவப் பகிர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்.பொது நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் கவிதை, கட்டுரை, சிறுகதை நூலாசிரியர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் உரை எதிர்வரும் 28 ஆம் தகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்குபொதுநூலக குவிமாட கேட்போர் கூடத்தில் அ.யேசுராசா தலைமையில் நடைபெறவுள்ளது(இ-10-51-102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இராணுவ பிரசன்னத்தை குறைக்கவும்

## ஐ.நா.சிறப்பு அறிக்கையாளர் பரிந்துரை

(கொழும்பு)

இராணுவத்தினர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும் என்பதுடன் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்ற இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும் என ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் இலங்கை அரசிற்கு பரிந்துரைத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது முன்வைத்த பரிந்துரைகள்.




- கால அட்டவணையுடன் கூடிய பரந்துபட்ட மற்றும் சுயாதீனமான நிலைமாறுகால நீதிப்பொறிமுறை ஒன்றை அரசாங்கம் உடனடியாக முன்வைக்க வேண்டும். அந்த பொறிமுறையானது உண்மை, நீதி, நட்டஈடு, மற்றும் மீள் நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்கவேண்டும்.
- நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பாக மக்களின் கருத்துக்களை பெறுவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு செயலணியின் பரிந்துரைகளின் நன்மைகளை அரசாங்கம் பெறவேண்டும்.
- இதுவரையான காலப்பகுதியில் ஐ.நாவின் உதவிகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக பயன்படுத்தவில்லை எனத் தெரிகின்றது. எனவே அரசாங்கம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தில் இருந்து மேலும் நிபுணத்துவ உதவிகளைப் பெற்றுக் கொள்வது அவசியமாகின்றது.
- பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக நீக்குவதுடன் அதற்குப் பதிலாக கொண்டு வரப்படும் சட்டம் அனைத்துலக தரங்களைப் பின்பற்றுவதாக அமைய வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விடயங் களை உடனடியாக மீளாய்வு செய்யவேண்டும்.
- இராணுவத்தினர் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும் என்பதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப் படுகின்ற இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திக்கூற விரும்புகின்றோம்.
- இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள காணிகள் தொடர்பான ஒரு வரைபடத்தை உடனடியாக தயாரிக்க வேண்டும். காணி விடுவிப்பு தொடர்பான ஒரு கால அட்டவணை அவசியமாகின்றது. மீளளிக்கப்படாத காணிகளுக்கு நட்டஈடு வழங்குவது அவசியமானதாகும். இது தொடர்பில் இராணுவத்தரப்பினர் மட்டும் முடிவெடுக்காத வகையிலான திட்டம் வேண்டும்.
- மனித உரிமை காப்பாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் முக்கியமாக பெண்கள் ஆகிய தரப்பினர் மீதான பாதுகாப்பு தரப்பின் கண்காணிப்பு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் செயற்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் (வெளி யிடப்படாதவை) உடனடியாக வெளியிடப்படவேண்டும்.
- சுயாதீன தன்மை, வெளிப்படைத்தன்மை என்பனவற்றின் அடிப்படையில் காணாமல் போனோர் குறித்த பணியகத்துக்கு ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆணையாளர்கள் இலங்கையின் பன்முகத்தன்மைகொண்ட சமூக கட்டமைப்பை பிரதிபலிப்பதாக அமைய வேண்டும்.
- மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடுவதற்காக பிரதிநிதிகள் காணாமல்போனோர் பணியகம் சார்பாக நியமிக்கப்பட வேண்டும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதற்கான பணியகங்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்த காணாமல்போனோர் பணியகத்தை கண்காணிப்பதற்காக பாதிக்கப்பட்டோரினால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு குழுவை நியமிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும்.
- தடயவியல் விசாரணைகளுக்காக உள்நாட்டு, பிராந்திய மற்றும் அனைத்துலக உதவிகளைப் பெறலாம். காணாமல்போனோர் பணியகங்களும் செயற்பாட்டில் நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களும் இணைந்து செயற்படவேண்டும்.
- அனைத்து பாதிக்கப்பட்ட சமூகங்களின் நன்மை கருதி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட வேண்டும். இதற்கு ஒரு பரந்துபட்ட ஆணை வழங்கப்பட வேண்டும். இதற்கான சட்டமூலம் விரைவாக கொண்டு வரப்பட வேண்டும். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கான ஆணையாளர் நியமனத்தில் பாதிக்கப்பட்டோர் இடம்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- மனித உரிமை மீறல்களை ஆராய்வது தொடர்பான தற்போதைய நீதி கட்டமைப்பில் காணப்படுகின்ற வரையறைகள் குறித்து ஆராய்ந்து முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பொறுப்புக்கூறல் பொறிமுறையில் இடம்பெறவேண்டிய நீதிபதிகளின் தேசியத்துவம் தொடர்பான விவாதமானது இந்த செயற்பாட்டை அரசியல்மயப்படுத்தியுள்ளது. இது தொடர்பாக ஆராயப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாக ஒரு பரந்துபட்ட திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். இது இனம், மதம், உள்ளிட்ட எந்தவொரு விடயத்தையும் கருத்தில் கொள்ளாது முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தவிடயத்தில் பால்நிலை விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக பெண்கள், குடும்பத் தலைவிகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். நட்டஈடு வழங்குதல் ஆனது உண்மை மற்றும் நீதியை புறந்தள்ளுவதற்காக பயன்படுத்தப்படக்கூடாது. நட்டஈடு செயற்பாடானது பொறுப்புத்தன்மையுடன் செயற்படவேண்டும்.
- இது உண்மையைக் கண்டறியும் ஆணையுடன் தொடர்புபடுவது பயனுள்ளதாக இருக்கும். காணி விடுவித்தல் தொடர்பான ஒரு கால அட்டவணையுடன் ஒரு வரைபடம் உடனடியாகத் தயாரிக்கப்பட வேண்டும். இராணுவத்தரப்பினர் நாட்டின் பாதுகாப்புக்கு தேவையான காணிகளை மட்டுமே வைத்திருக்க வேண்டும். இது இராணுவத்தரப்பினால் மட்டும் ஆராயப்படக்கூடாது. இதற்கான ஒரு பரந்துபட்ட பார்வை கொண்ட ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். காணி விவகாரங்களுக்காக ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும்.
- மக்கள் 30 வருடங்களாக தரமற்ற வசதிகளுடன் வாழ்ந்ததைக் காணமுடிகின்றது. இது நடுத்தர வருமானம் கொண்ட நாட்டுக்கு பொருத்தமானதல்ல. இது தொடர்பான கொள்கை ஆராயப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கான வீட்டுத்திட்டமானது மக்களுக்கு பொருத்தமானதாக அமைய வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மக்கள் "தமது உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவதற்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு நினைவுகூரும் செயற்பாடானது நட்டஈடு பெறுவதைப் போன்ற ஒரு உணர்வைக் கொண்டது.
- அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயற்பாடானது சரியான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது.

நீதித்துறையின் சுயாதீனத்தன்மை சட்டமா திணைக்களத்திற்கான அதிகாரங்கள், பாதுகாப்புத்துறை மீளாய்வு என்பன இங்கு ஆராயப்பட வேண்டும். அரசியலமைப்பு மறுசீரமைப்பு இடம்பெறும் தற்போதைய நிலையில் அவசியமாகின்றது.

- அனைத்துலக மனித உரிமை தரங்களை உள்நாட்டில் நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக அனைத்துலக சாசனத்தை இலங்கை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். எனது அறிக்கையில் நீதித்துறை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்பாக பல பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளேன். காரணம் நிலைமாறுகால நீதித்துறையில் முக்கிய பங்கை வகிக்க உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்வீக வரலாற்று அடையாளங்களைக் கொண்டுள்ள இரணைதீவு மண் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும்

## சிறிதரன் எம்.பி.வலியுறுத்து

(கண்டாவளை)

இரணைதீவு மக்கள் தங்கள் பூர்வீக இடங்களில் சென்று வாழ்வதற்காக கடந்த ஐந்து மாதங்களிற்கு மேலாக வீதியில் போராடி வருகின்ற இந்த மக்களின்போராட்டத்தை மதித்து இரணைதீவை விடுவிப்பதற்கு அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மிகவும் பழைமைவாய்ந்த கடல்வளம் கொண்ட இரணைதீவு இதுவரை விடுவிக்கப்படாத நிலையில் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக்கோரி கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஐந்து மாதங்களாக இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இந்த மக்களின் பூர்வீக நிலங்கள் விரைவாக விடுவிக்கப்பட்டு அவர்கள் சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழுகின்ற நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும் எனக்குறிப்பிட்டதுடன், இரணைதீவு விடுவிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி கடந்த ஜூன்மாதம் 19ஆம் திகதி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தேன்.

அத்துடன், கடந்த பெப்ரவரி மாதம் 8ஆம்திகதி பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, ஆகியோருடன் பாராளுமன்றத்தில் கேள்வி நேர கலந்துரையாடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மே மாதம் 5ஆம்திகதி என்னால் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு மேலான வரலாற்றையும் பூர்வீக அடை யாளங்களையும் கொண்ட இரணைதீவு மண் விரைவாக விடுவிக்கப்பட்டு அந்த மக்கள் அங்கு குடியேறுவதற்கும் தொழில் செய்வதற்கும் அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிட்டஅவர்,

இவ்வாறு அரசாங்கம் காலத்தை இழுத்தடிப்பது அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இழக்கச்செய்யும் ஒரு செயற்பாடாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (2-315)

# விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுக்கு வாகனங்கள் இந்தியாவினால் கையளிப்பு



(பரந்தன்)

இந்திய அரசின் 90 மில்லியன் ரூபா பெறுமதியில் வாகனங்கள், உபகரணத் தொகுதிகள் என்பன யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி அறிவியல் நகர் விவசாய பீடத்தில் நடைபெற்றது.

இந்திய அரசின் 90 மில்லியன் ரூபா பெறுமதியில் 48 மில்லியன் ரூபாவுக்கு இரண்டு அதி சொகுசு பேருந்துகள், டபிள்கப் வாகனம், உழவு இயந்திரம் என்பன பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. மிகுதி தொகுதி வாகனங்கள், உபகரணங்கள் என்பன விரைவில் கையளிக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.நடராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இவற்றை கையளித்துள்ளார். இதன் போது யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் விக்னேஸ்வரன், மற்றும் பொறியியல், விவசாய பீடங்கள் உள்ளிட்ட பீடங்களின் பீடாதிபதிகள் விரிவுரையாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(2-312)

### மலேரியா நுளம்பைக் கட்டுப்படுத்த

# கிணறுகளில் மீன்குஞ்சுகள் விடும் நடவடிக்கை ஆரம்பம்



(பணிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மலேரியா நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு கிணறுகளில் மீன்குஞ்சுகள் விடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட மாங்குளம் மலேரியா தடுப்பு பிரிவினரும்,மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளும் இணைந்து மலேரியா நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக மக்கள் வாழ்விடங்கள் உள்ள கிணறுகளில் மலேரியா தொற்றை கொண்டு வரும் ஸ்பெரன்சி எனப்படும் நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த கிணறுகளில் மீன்குஞ்சுகள் விடும் நடவடிக்கை தொடங்கியுள்ளது. (2-281)




## 400 மாணவர்களுக்கு கணித உபகரணப் பெட்டிகள்

(மல்லாவி)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொருளாதார ரீதியாக பின்தங்கிய வள்ளிபுனம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 400 மாணவர்களுக்கு கணித உபகரணப் பெட்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபரினால் வட்டு. இந்து வாலிபர் சங்கத்திடம் விடுத்த விண்ணப்பத்திற்கு அமைவாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் முன்னால் தலைவர் சிறிகாந்தன் மற்றும் வள்ளிபுன இனியவாழ்வு இல்ல முகாமையாளர் திருச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கணித உபகரணப் பெட்டிகளை வழங்கி வைத்துள்ளனர். (2-15)

# நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சிப்பகுதியில் கஞ்சா வைத்திருந்தவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிப்பகுதியில் 3 ஆயிரத்து 750 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவரைக்கைது செய்த கிளிநொச்சிப்பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

************

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் 40 நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறு இடப்பட்ட கட்டளையை உதாசீனம் செய்தவருக்கு 40 நாட்கள் கட்டாயச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு உடைமையில் வைத்திருந்தமை தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஏற்கனவே கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் குறித்த நபருக்கு சமுதாயம் சார் சீர்திருத்தக்கட்டளையின் கீழ் 40 நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த நபர் 14 நாட்கள் மாத்திரமே சமூக சேவையில் ஈடுபட்டு 26 நாட்கள் வேலை செய்யாது நீதிமன்றக் கட்டளையை உதாசீனம் செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து 40 நாட்கள் கட்டாயச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

************

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் கத்திவெட்டுச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஏழு பேரையும் கடும் நிபந்தனையுடன் கூடிய பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திவெட்டில் முடிந்ததுடன், பிரதேசத்தில் அமைதியின்மையும் ஏற்பட்டது.

இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பில் இரண்டு தரப்புக்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஓர் தரப்பைச் சேர்ந்த ஏழு சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து கிராம அலுவலர் வதிவிடத்தை உறுதிப்படுத்திய தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்லுமாறு வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நீதிமன்றில் கையொப்பமிடுமாறும் கடும் நிபந்தனைகளுடன் கூடிய பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதேவேளை மற்றைய தரப்பும்கடந்த வாரத்தில் பிணையில் சென்றுள்ளன.

************

கிளிநொச்சிப் பகுதியில் பொது இடத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டவருக்கு மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் மதுபோதையில் பொதுஇடத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

************

கிளிநொச்சிப் பகுதியில் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்தவருக்கு பதினையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப்பகுதியில் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து பதினையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

************

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் அனுமதிப்பத்திரமின்றியும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் மணல் ஏற்றிச்சென்ற ஐந்து பேருக்கு ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப்பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் கொண்டு சென்றவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றியவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. உமையாள்புரம் பகுதியில் மணல் அகழ்ந்து உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்றவருக்கு பதினையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் கொண்டு சென்றவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் கொண்டு சென்றவருக்கு முப்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றியும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் மணல் கொண்டு சென்ற ஐந்து பேரை கைது செய்து இவர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் குறித்த நபர்களை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

************

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் விபத்தொன்றைத் தடுக்காமல் பேருந்தை செலுத்திச்சென்று பாலத்துடன் மோதி விபத்தை ஏற்படுத்தியவருக்கு ஆறாயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், சாரதியனுமதிப்பத்திரம் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உமையாள்புரம் ஏ-9 வீதியில் பேருந்தைச் செலுத்திச்சென்ற வேளை, பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. இவ்வாறு கவனயீனமான முறையில் வாகனத்தைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய சாரதியை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப்பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில், நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து, அவருக்கு ஆறாயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு மாத காலத்திற்கு சாரதியனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்விதைப்பு இறுதித் திகதிக்கு முன்னர் பயிரழிவு காப்புறுதியை மேற்கொள்க!

## ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் 2017-2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையினை மேற்கொண்டுள்ள அனைத்து விவசாயிகளும் நெல் விதைப்பு இறுதித் திகதிக்கு முன்னதாக மத்திய விவசாய அமைச்சின் கீழ் இயங்கி வரும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் ஊடாக பயிரழிவுக் காப்புறுதியை மேற்கொள்வதன் ஊடாக எதிர்காலத்தில் நெற் செய்கையின் போது பயிரழிவுகள் ஏற்படுமாயின் அதில் இருந்து மீண்டு கொள்ள வாய்ப்பாக அமையும் என ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன்-சற்குணநேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ், நடப்பாண்டுக்குரிய காலபோக நெற்செய்கையை ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 31 கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட சுமார் 3ஆயிரத்து 500 விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள், பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்தையன்கட்டு குளத்தின் கீழாகவும் மற்றும் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழாகவும் மானாவாரியாகவும் 9 ஆயிரத்து 600 ஏக்கரில் நெல் பயிரிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த ஆண்டு போல நடப்பாண்டிலும் கால நிலை மாற்றங்களால் பயிரழிவிற்கு உள்ளாகும் நிலை ஏற்படுமேயானால் அந்த இழப்பில் இருந்து விவசாயிகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மத்திய அரசின் விவசாய அமைச்சின் கீழுள்ள கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் ஊடாக மிக குறைந்த காப்புறுதிக் கட்டணம் மூலம் பெரிய ஒரு இழப்பீட்டை விவசாயிகள் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் நடப்பாண்டில் புதிய காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆகவே, ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் நடப்பாண்டுக்குரிய காலபோக நெற்செய்கையின் இறுதி விதைப்புத் திகதி எதிர் வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமையுடன் முடிவடைகின்றது.

எனவே, விவசாயிகள் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையினால் அறிமுகப்படுத்தியுள்ள காப்புறுதி திட்டங்களான பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழான நெற் செய்கை ஒரு ஏக்கருக்கு மிகக் குறைந்த காப்புறுதிக் கட்டணம் 200 ரூபாவைச் செலுத்துவதன் ஊடாக இழப்பு ஏற்படும் போது 4 ஆயிரம் ரூபாவை இழப்பீட்டுப் பணமாக பெற்றுக் கொள்ளலாம்.

அதிகூடிய காப்புறுதி கட்டணம் ஆயிரத்து 80 ரூபாவை செலுத்தும் போது, இழப்பீடு ஏற்படும் போது 18 ஆயிரம் ரூபாவை இழப்பீட்டுப் பணமாக பெற்றுக் கொள்ளலாம்.

இதுபோன்று சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழான நெற்செய்கையினை மேற்கொண்ட விவசாயிகள் மிகக் குறைந்த காப்புறுதி பணமாக 220 ரூபாவைச் செலுத்துவதன் மூலம் இழப்பீட்டுத் தொகையாக 4 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்ளலாம். சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழான நெற்செய்கையின் போது அதிகூடிய காப்புறுதிக் கட்டணம் 550 ரூபாவைச் செலுத்துவதன் ஊடாக இழப்பீடு ஏற்படும் போது 10 ஆயிரம் ரூபாவைப்பெற்றுக் கொள்ளலாம்.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் அனைத்து குளக் காணிகளிலும் மானாவாரியாக நெல் ப்யிரிட்டுள்ள விவசாயிகள் அதி குறைந்த காப்புறுதிக் கட்டணம் 240 ரூபாவைச் செலுத்துவதன் ஊடாக இழப்பு ஏற்படும் போது 4 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்ளலாம்.

அதிகூடிய காப்புறுதிக் கட்டணம் 480 ரூபாவை செலுத்துவதன் ஊடாக இழப்பு ஏற்படும் போது 8 ஆயிரம் ரூபாவை இழப்பீட்டுப் பணமாக பெற்றுக் கொள்ளலாம்.

காப்புறுதி செய்யவும் மேலதிக விபரங்களுக்கும் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# குருகுலப் பிதா அப்புஜி நினைவு நாள் அனுஷ்டிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மகா தேவா சைவச் சிறுவர் இல்லத்தில் குருகுலப் பிதா அப்புஜியின் நினைவு வணக்க நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது.

குருகுல பிதா அப்புஜியின் நினைவு நாளில் காலை 7 மணிக்கு அவரது உருவச்சிலை அமைந்துள்ள மகா தேவா சைவச் சிறுவர் இல்ல வளாகத்தில் பொன். நித்தியானந்தனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, ஓய்வுநிலை அரச உத்தியோகத்தர்கள், மகாதேவா சைவச்சிறுவர் இல்ல உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டு குருகுல அப்புஜிக்கு அஞ்சலி செலுத்தினர். (2-315)

# அன்னை வேளாங்கன்னி மாதா சொரூபம் தீ வைத்து எரிப்பு

## உக்குளாங்குளத்தில் சம்பவம்



(குருமன்காடு)

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள அன்னை வேளாங்கன்னி மாதா சொரூபம் இனந்தெரியாத விசமிகளால் தீ வைத்து எரியூட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் நடைபெற்றுள்ளது.

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் அமைந்திருந்த அன்னை வேளாங்கன்னி ஆலயத்தின் மாதா சொரூபம் உள்ள கண்ணாடிப் பெட்டிக்குள் விசமிகள் எண்ணெய்ஊற்றி தீ வைத்துள்ளனர். இதனால் மாதா சொரூபம் சேதமடைந்துள்ளதுடன், கண்ணாடிப் பெட்டியும் சிதைவடைந்துள்ளது.

குறித்த பகுதியில் இரவு 11.45 மணியளவில் சுவாலை விட்டு எரிவதைக் கண்ட அயலவர்கள் அதனை தண்ணீர் ஊற்றி அணைத்ததாகவும் அப்பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று சென்ற சத்தம் கேட்டதாகவும் தமது பொலிஸ் நிலைய வாக்குமூலத்தில் அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# ஆற்று மணல் ஏற்றி பயணித்த உழவு இயந்திரம், டிப்பர்கள் சிக்கின



(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள நெத்தலியாற்றுப் பகுதியிலும் மற்றும் குமாரசாமிபுரம் கிராம பகுதியிலும் அனுமதிப்பத்திரத்திற்கு முரணாகவும் மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றியும் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரம் ஒன்றையும், 2 டிப்பர் வாகனங்களையும் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றும் நேற்று முன்தினமும் இரவும் 8 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணிவரையான காலப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர்.ஜீ.விமல குணரட்ணாவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸார் முல்லைத்தீவு - பரந்தன் வீதியிலுள்ள நெத்தலியாற்றுப் பகுதியில் மேற்கொண்ட விசேட வீதி பரிசோதனையின் போது சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த 2 டிப்பர் வாகனங்களைத் தடுத்து நிறுத்தி சோதனையிட முற்பட்ட போது பொலிஸாரின் கட்டளையையும் மீறி அதி வேகமாக டிப்பர் வாகனங்களைச் செலுத்தி தப்பிச் செல்ல முற்பட்ட போது பொலிஸார் அதனை 15 கிலோ மீற்றர் தூரத்திற்கு துரத்திச் சென்று பரந்தனுக்கு அண்மையாக வைத்து கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கிளி நொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் உத்தரவுக்கு அமைய தருமபுரம் பகுதியில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவின் பொலிஸார் சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த உழவு இயந்திரத்தை தடுத்து நிறுத்தி ஆவணங்களை சோதனையிட்ட போது அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றிப்பயணித்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு, அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையிலும் மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றியும் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த உழவு இயந்திரத்தையும் 2 டிப்பர் வாகனங்களையும் சந்தேகத்தின் பேரில் கைதான அதன் சாரதிகளையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் அவர்களை பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீண்டும் நாளை வியாழக்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் கைப்பற்றப் பட்டுள்ள தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களையும் முற்படுத்தவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




# மணல் ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் எதிர் வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பகிரங்க மணல் ஏல விற்பனை நீதிமன்ற வளாகத்தில் நடைபெறுமென நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி ஏல விற்பனைக்கான மணலை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என குறிப்பிட்டுள்ளார். (2)

# மாணிக்கம் பண்ணை கிராமத்துக்கான நுழைவாயில் திறந்து வைக்கப்பட்டது



(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம், மாணிக்கம் பண்ணை கிராமத்திற்கான நுழைவாயில் திறந்து வைக்கப்பட்டது.

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் இணைந்து நேற்று திறந்து வைத்தனர்.

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் மூன்று இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் குறித்த கிராமத்திற்கான நுழைவாயில் அமைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச சபைச் செயலாளர், அப்பகுதி கிராம அலுவலர், மதகுருமார், கிராம மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## பசுப்பாலும் பாற்பொருட்களின் மருத்துவப் பண்பும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

வாரம் ஓர் மூலிகை என்னும் தலைப்பின் கீழ் மூலிகைகளுக்குள் அடங்காவிட்டாலும் சித்த மருத்துவத்தில் முக்கிய பயன்தரும் சமவிகித போசணை மிகுந்த நிறையுணவான பசுவின் பால், பாற்பொருட்களின் மருத்துவ குணங்களை இவ்வார இதழில் ஆராய்வோம்.

பசுவின் பாலிற்கு சுதை, அமுது,சாறு போன்ற வேறு பெயர்களும் கொடுக்கப்படுகின்றது. பசுவின் பாலானது ஊன் செய் பொருளும் சர்க்கரையும் நில உப்புக்களும் இவற்றோடு கொழுப்பின் நுண்துணிக்கைகளும் சேர்ந்து நீர்மயமாய் காணப்படும். பாலில்முட்காலே அரை காட் பங்கு நீர் உண்டு. பாலில் உள்ள ஊன் செய் பொருள் (cesin) மிக விரைவில் செந்நீரில் கலந்து கொள்கின்றது. பாலில் உள்ள கொழுப்பும் சர்க்கரையும் உடலுக்கு வெப்பத்தையும் வன்மையையும் கொடுக்கின்றது. பாலில் உள்ள நில உப்புக்களில் சேர்ந்திருக்கும் கல்சியம், பொஸ்பரஸ் போன்றவை என்புகள், பற்கள் மற்றும் மூளை நரம்புகளை செவ்வனே வேலை செய்யுமாறு செய்கின்றன. இந்த உப்புக்களுடன் சோடியம் போன்றன சேர்ந்திருப்பதனால் காம்பற்ற சுரப்பிகளுக்கு எழுச்சி மருந்துகளாக பயன்படுகின்றன.


உடலுக்குள்ளே பசுப்பால் சென்றவுடன் செந்நீருடன் சேர்ந்து வெள்ளை அணுக்கள் அதிகப்பட்டு நோயை அணுகவொட்டாமல் தடுக்கின்றன. பாலில் காடிப்பொருட்களும் உண்டு. அவைகள் உணவுப் பொருட்களை மாற்றம் அடையச் செய்து செந்நீரில் கலக்கப் பேருதவி செய்கின்றன. இதனால் பாலில் உயிர்களின் வளர்ச்சிக்கும் உரத்திற்கும் வேண்டிய பொருட்கள் எல்லாம் சேர்ந்து ஒரு நிறையுணவாக அமைகின்றது. அத்துடன் பாலும் பாற்பொருட்களும் சிறந்த உணவுப் பொருளாக இருப்பதனாலும் பாலும் பாலில் இருந்து தயாரிக்கப்படும்தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலிய உடன்படு பொருட்களும் உரம் தரும் உணவுப் பொருட்களாக இருப்பதாலும் உயிர்ச்சத்துக்களும் கனிமங்களும் இருப்பதால் இது சிறந்த உணவாக கருதப்படுகின்றது.


பாலில் நிறப் பசுவின் பால் சிறந்ததாக கருதப்படுகின் றது. கபில நிறம் என்பது கருமை கலந்த பொன் நிறத்தைகுறிப்பதாகும். வெண்மை நிறப் பசுவின் பால் களைப்பையும் செம்மை நிறப் பசுவின் பால் கசரோகம் போன்ற சுவாச ரோகத்துக்கும் சிறந்ததா கும். காய்ச்சாத பல் பசி தீபனத்தை உண்டாக்கும். காய்ச்சிய பால் சரீரத்தில் உள்ள வெப்பத்தையும் தணிக்கும்.

சித்த மருத்துவத்தில் நோய் களிற்கு அடிப்படைக் காரணமாக அமைவது முத்தோஷங்களான வாத, பித்த, கபங்கள் சமநிலையில் ஏற்படும் மாற்றமே. அந்த வகையில் வெண்மை நிறப்பசு வின் பால் அதிகரித்த பித்த தோஷத்தையும் செம்மை நிறப் பசுவின் பால் அதிகரித்த வாத தோஷத்தையும் கருமை நிறப் பசுவின் பால் அதிகரி த்த கப தோஷத்தையும் கபல நிறப் பசுவின்பால் அதிகரித்த வாத, பித்த, கப தோஷங்களையும் நீக்க வல்லது.


உணவாகின்றமையால் பாலை காய்ச்சாமல் அருந்தக் கூடும். ஆனால் இதில் எப்பொருளுக்கும் ஈடாகாத முழு பத்தியத்துக்கு உதவுகின்ற பால் ஆனது பசுவில் பகல் முழுவதும் சுரந்திருந்து இரவில் கறக்கின்ற பகற்பாலாகும். இந்த பாலைக் காய்ச்சி அருந்த தேக அழற்சி கப சம்பந்தமான ரோகங்கள் ஆஸ்துமா, கண்வியாதிகள்போன்றன நீங்கும். பசுவின் பாலில் ஐம்பூதத் தன்மைகளும் உண்டு. பால் ஆகாசக் கூறும் தயிர் வளிக்கூறும் மோர் நீரின் கூறும் நெய் தீயின் கூறையும் கொண்டனவாக இருக்குன்றன. பசுவின் பாலுக்கு சிறு காஞ்சோன்றி வேரின் துண்டு











### 100g பசுப்பால், தயிர், மோர் இலுள்ள போசணை பெறுமானங்கள்

| | பசுப்பால் | ஆடை நீக்கிய பால் | தயிர் | மோர் |
|---|---|---|---|---|
| ஈரலிப்பு (g) | 87.5 | 92.1 | 89.1 | 97.5 |
| சக்தி (Kcal) | 64.0 | 29.0 | 60.0 | 15.0 |
| புரதம் (g) | 3.2 | 2.5 | 3.1 | 0.8 |
| கொழுப்பு (g) | 4.1 | 0.1 | 4.0 | 1.1 |
| காபோவைதரேற்று (g) | 4.4 | 4.6 | 3.0 | 0.5 |
| கல்சியம் (mg) | 120 | 120 | 149 | 30 |
| பொசுபரசு (mg) | 90 | 90 | 93 | 30 |
| இரும்பு (mg) | 0.2 | 0.2 | 0.2 | 0.8 |
| விற்றமின் A (mcg) | 52.2 | -- | 30.6 | 00 |
| βகரோட்டீன் (mcg) | 6.0 | -- | -- | -- |
| தயமின் (விற். $B_1$) (mcg) | 50.0 | -- | 50 | -- |
| ரைபோபிளேவின் (விற். $B_2$) (mcg) | 190.0 | -- | 160 | -- |
| நியாசின் (விற். $B_3$) (mcg) | 0.1 | 0.1 | 0.1 | -- |
| விற்றமின் C (mg) | 2.0 | 1 | 1.0 | -- |

நைத்து சேர்த்து காய்ச்சுவோம் ஆயின் ஆஸ்துமா, கசரோகம் நீக்கும். சளி போன்ற நிலைமைகளில்பசுவின்பாலை அருந்தும் போது வேர்க்கொம்பு, மிளகு போன்றவற்றை இட்டுகாய்ச்சிஅருந்தல்வேண்டும். பசுவின் பாலில் [illegible] போன்ற இலைகளை சேர்த்து காய்ச்சி அருந்தும் போது கப சம்பந்தாமான நோய்கள் நீங்கும்.

பசுவின் நெய்யை உருக்கு அளவாக உணவுகளில் சேர்த்து உட்கொள்ளின் அது உண்ட உணவுகளை செரிப்படையச் செய்து சரீரத்துக்கு புஷ்டியையும் மிகுந்த பலத்தையும் உண்டாக்கும். பசுவின் மோரை நீர் பெருக்கி அருந்தும் போது பித்தரோகம், குடற்புண், மூலரோகம் அக்கினிமாந்தம், பசியின்மை போன்றவற்றை நீக்கி வாதம் முதலிய முத்தோஷங்களை அதிகரிக்க விடாமல் உடம்பை பாதுக்காக்கும்.

பசுவின் தயிர் ஆனது பித்த ஆதிக்கத்தினால் உண்டாக்கும் சாதாரண நோய்களை எல்லாம் ஒழித்து உடம்பிற்கு உறுதியையும் சுகத்தையும் உண்டாக்கும். அத்துடன் பசுவின் தயிரால் பசி உண்டாகும், அஜீரணம், தாகம், களைப்பு, இருமல், உடல் எரிசசல் என்பன நீங்கும். மேலும் இன்றைய காலகட்டத்தில் தொற்றாநோய்களின் தாக்கம் இருப்பவர்களுக்கு பசுவின் பாலில் கொழுப்புச்சத்து இருப்பதனால் பசுப்பாலை குறைந்தளவிலும் ஐதாக்கியும் பயன்படுத்துமாறு கூறப்பட்டுள்ளது. ஆனாலும் சித்த மருத்துவத்தில் பசுப்பாலில் புரதச்சத்துக்கள், உயிர்ச் சத்துக்கள், கனிமங்கள் நிரம்பி இருப்பதால் அவற்றின் தேவை கருதியும் தொற்றா நோயின் தாக்கம் இருப்பவர்கள் வற்றக் காய்ச்சி ஆடை நீக்கிய பசுவின் பாலை பயன்படுத்தலாம் எனவும் பரிந்துரைக்கப்படுகின்றது.

மற்றும் காய்ச்சிய பசுவின் பால் 15 ml இற்கு,15 ml தேன் கலந்து தினமும் இரவில் அருந்திவர மெலிந்த உடல் எடையைப் பெறலாம்.

பெரும்பாலான சித்த மருந்துகளில்மூலிகைகள், தாதுப் பொருட்கள், ஜீவப் பொருட்களை பயன்படுத்தும் அப் பொருட்களில் உள்ள மலினங்களை (நச்சுத்தன்மையை) நீக்குவதற்கு இப் பசுப்பால் முக்கியமானதாகும்.

இப்பசுப்பாலானது குழந்தைகள், வயதானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும்தாய்மார்கள் ஆகியோருக்கு ஏற்ற உணவாகும். கர்ப்பிணித் தாய்மார்கள் கருத்தரித்து 5 1/2 மாதங்களின் பின் பசுப்பாலினுள் குங்குமப் பூவினை இட்டு காய்ச்சி அருந்துவதால் தாய்க்கும் சிசுவிற்கும் இரத்தம் சுத்தி பெறும். பாலூட்டும் தாய்மார் இப் பசுப்பாலினுள் வெள்ளைப்பூண்டை இட்டு காய்ச்சி அருந்துவதால் பாற்சுரப்பு அதிகரிக்கின் றது.

தயிர், மோர் ஆகியன சாப்பாட்டின் இறுதியிலேயே உணவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றிலுள்ள புரதம் இலகுவில் சமிக்கக் கூடியது. இதிலுள்ள லக்ரிக்கமிலம் உணவுக் கால்வாய்களில் நோய் விளைவிக்கும் பக்றீரியாக்களை பெருக விடாது தடுக்கவல்லது.

வெண்ணெய் நீக்கிய புளித்த மோர், தயிர் என்பன சித்தர்களால் பத்திய உணவாக கருதப்பட்டு பயன்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மோர் அல்லது தயிர் சேர்த்து சோறு உண்பது சிறந்தது. குழந்தைகளுக்கு சோறும் தயிரும் சிறந்த உணவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றும் போராட்டம்




(யாழ்ப்பாணம்) உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை மீளவும் வவுனியா மேல் நீதிமன்றுக்கு உடனடியாக மாற்ற வேண்டும். அனைத்து அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும் ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி (New Democartic Marxist Leninist Party) மற்றும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ( Mass Movement for Social Justice) ஆகியன இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்.பிரதான பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்றது. (படங்கள்:-உ.சாளின்)

## ஊடகங்களை விமர்சனம் செய்யும் அதிகாரம் பிரதமருக்கு கிடையாது

### விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழுப்பு)

செய்திகளில் படங்களை பிரசுரிப்பது குறித்து பிரதமர் அறிவுறுத்தக்கூடாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களை விமர்சனம் செய்யும் அதிகாரம் பிரதமருக்கு கிடையாது என அவர் தெரிவித்தார்.

கௌதம புத்தரின் புகைப்படம் ஒன்றை பிரசுரிப்பதற்கு பிரதமரின் அனுமதி பெற்றுக்கொள்ளக் கூடிய தேவை உள்ளதா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாநாயக்க தேரர்கள் தொடர்பில் விமர்சனங்களை வெளியிடவும் குற்றச்சாட்டுக்களை சுமத்தவும் பிரதமருக்கு எவ்வித தகுதியும் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.(இ-7)

## இலங்கை வந்த இந்தியர் பலி!

(கொழும்பு)

கொழும்பு -பம்பலம்பிட்டி ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் இந்தியப் பிரஜை ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் கிரிக்கெட் தொடர் ஒன்றுக்காக இலங்கைக்கு வந்திருந்த நிலையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ-7)

## மகிந்தவிற்கு அநுர சவால்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு, ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சவால் விடுத்துள்ளார்.

புதிய அரசியல் சாசனம் தொடர்பில் விவாதமொன்றை நடத்தத்தயார் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றின் போது அவர் இந்த சவாலை விடுத்துள்ளார்.

மேலும் புதிய அரசியல் சாசனம் நாட்டை பிளவடையச் செய்யவுள்ளதாகவும் அதற்கு ஜே.வி.பி. ஆதரவளிப்பதாகவும் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தி வருவதாகவும் இந்த விடயம் குறித்த விமல் வீரவன்சவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடன் விவாதம் நடத்தத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமல் வீரவன்ச இது தொடர்பிலான விவாதமொன்றை நடத்த விரும்பினால் கட்சியின் ஓர் உறுப்பினரை அனுப்பி வைக்கத் தயார் என அவர் தெரிவித்தார். (இ-7)

## அமரவன்ச தேரருக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி



(கொழும்பு)

இலங்கை ராமான்ய மகாநிகாயவின்மேல்மாகாண தலைமை சங்கநாயக தேரர் காலம்சென்ற சங்கைக்குரிய கலாநிதி நாகொட அமர வன்ச நாயக தேரரின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதி மரியாதை செலுத்தினார்.

தேரரின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் மருதானை வித்யால பிரிவெனா விகாரைக்கு நேற்று முன்தினம் இரவு சென்ற ஜனாதிபதி தேரரின் பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தியதுடன், விகாரையின் பிக்குகளுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்தார். (இ-7)

## வல்லப்பட்டைகளுடன் பிரித்தானியர் கைது

(கொழும்பு)

கொழும்பு - கோட்டை பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து, மூன்று கிலோ 370 கிராம் வல்லப் பட்டைகளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இவர் 35 வயதான பிரித்தானியப் பிரஜை எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7142 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 22<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6029 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 59 சூரி செவ் 1இல்<br>தகைமை/தொழில்:BA/நிரந்தர தொழில்<br>தொ.இ: B/7145 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 21<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6030 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 13 செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc Eng/ உதவி பணிப்பாளர்<br>தொ.இ: B/7148 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 58 செவ் 4இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6034 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்:A/L சாரதி<br>தொ.இ: B/7149 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:78 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/6035 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நூறுநாள் போராட்டம் நிறைவு
## பாராளுமன்றை முற்றுகையிட தமிழக விவசாயிகள் திட்டம்



(டில்லி)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, தமிழக விவசாயிகள் மேற்கொண்டு வந்த நூறு நாள் போராட்டம், இறுதி நாளை எட்டிய நிலையில், பாராளுமன்றத்தை முற்றுகையிடுவதை தவிர வேறு வழியில்லை என, விவசாயிகளின் போராட்டத் தலைவர் தெரிவித்துள்ளார்.

விவசாய கடன் தள்ளுபடி, காவிரி வேளாண்மை வாரியம் அமைத்தல் உட்பட, பல்வேறு கோரிக்கைகளை முன்வ்வைத்து, கடந்த நூறு நாட்களாக டில்லியில் விவசாயிகள் நடத்தும் போராட்டம், நேற்று முன்தினம் நூறாவது நாளாக இடம்பெற்ற போது, போராட்டத்தின் தலைவர் நல்லக்கண்ணு செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் மொத்தம் 141 நாட்கள் போராட்டம் நடத்தினோம். ஆனாலும் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற மத்திய அரசு முன்வரவில்லை. அடுத்த மாதம் 20, 23 ஆம் திகதிகளில் 5 இலட்சம் விவசாயிகள் பாராளுமன்றத்தை முற்றுகையிட உள்ளோம் என தெரிவித்தார்.

குறித்த போராட்டம் நேற்று நூறாவது நாளாக இடம்பெற்ற போது, கழுத்தில் கத்தியை வைத்து போராடிய விவசாயிகள், 'விவசாயிகளின் கழுத்தை அறுக்காதே' என குரல் எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## றக்காவை அழி[...] அமெரிக்கக் [...]
### ரஷ்யா பகிரங்க குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

ஐக்கிய அமெரிக்க தலைமையிலான இராணுவக் கூட்டணி, சிரியாவின் றக்கா நகரத்தை, பூமியிலிருந்தே இல்லாது செய்துவிட்டது என, ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

1945ஆம் ஆண்டில், ஜேர்மனியின் ட்ரெஸ்டெனை, ஐக்கிய அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து குண்டுத் தாக்குதல் நடத்தித் தகர்த்ததைப் போன்றே றக்காவும் தகர்க்கப்பட்டுள்ளது என ரஷ்யா தெரிவித்துள்ளது.

சிரியாவின் றக்கா நகரத்தை, ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததாரிகளிடமிருந்து கைப்பற்றிவிட்டதாக, ஐக்கிய அமெரிக்காவால் ஆதரவளிக்கப்படும் சிரிய ஜனநாயகப் படைகள், கடந்த வெள்ளிக்கிழமை, உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தன.

சிரியாவில், ஐ.எஸ். ஐ.எஸ் ஆயுதக்குழுவுக்கு எதிரான மோதலில், அமெரிக்கா தலைமையிலான கூட்டணி ஒரு பக்கமாகவும், சிரிய அரசாங்கமும்ரஷ்யாவும்தலைமைதாங்கும் இன்னொரு கூட்டணி மறுபக்கமாகவும் செயற்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே, அமெரிக்கக் கூட்டணியின் வெற்றியைத் தொடர்ந்து, ரஷ்யாவின் குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது.

றக்கா தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின்

## இலங்கையில் இன அழிப்பு நடந்தபோது ராகுல் காந்தி எங்கே போனார்?
### தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை கேள்வி



(சென்னை)

தமிழின் பெருமை பற்றி பேசும் ராகுல் காந்தி இலங்கையில் இனஅழிப்பு போர் நடத்தியதற்கு காங்கிரஸ் துணை போன போது எங்கே போனார் என் தமிழக பாஜக தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் கேள்வி எழுப்பியதற்கு குஷ்பு பதிலளித்துள்ளார்.

குஷ்பு தனது டுவிட்டர் பக்கத்தில், ஏன் மேடம், அரைச்சமாவே திரும்ப திரும்ப அரைக்கிறீங்க.

இதில் மெர்சலைப் பற்றி நீங்கள் பேசாமல் இருப்பதனால் மட்டும் எதுவும் மாறிவிடாது.

அதற்கும் நீங்கள் பேசுவதற்கும் என்ன சம்பந்தம். நிஜப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவோம்.

எங்களிடம் மோடி இருக்கிறார், ட்ரம்பால் கூட எங்களை எதுவும் செய்ய முடியாது என்று சொன்ன அ.தி.மு.க. அமைச்சருக்கு பதில் சொல்லுங்கள் என்று கூறியுள்ளார்.

விஜய் நடிப்பில் வெளியான மெர்சல் படத்துக்கு பாஜக எதிர்ப்பு தெரிவிப்பது தொடர்பாக காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி டுவிட்டரில் கருத்து தெரிவித்திருந்தார்.

அதற்கு தமிழிசை சௌந்தரராஜன் பதில் அளித்திருந்த நிலையில், தற்போது குஷ்பு சில கேள்விகளை எழுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## உலகம் முழுவதும் 11[...] கண் பார்வை இன்[...]



(வோஷிங்டன்)

உலக வங்கியின் 'வளர்ச்சி திட்டங்களை கண்டறிதல்' அமைப்பு சார்பில் சர்வதேச நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் 110 கோடி பேர் கண் பார்வை இன்றி அவதிப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

உலக வங்கியின் வளர்ச்சி திட்டங்களை கண்டறிதல்' அமைப்பு அண்மையில் சர்வதேச நாடுகளில் ஆய்வு மேற்கொண்டது.

இதன்மூலம் 110 கோடி பேர் கண் பார்வை இன்றி அவதிப்படுவதும் அடையாளம் இன்றி தவிப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் என்ன என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு உலக மக்களில் பெரும்பாலானோருக்கு சுகாதாரம் மற்றும் கல்வி அறிவு இல்லாததே காரணமாக

## 116 பேரை கொன்று குவித்து ஐ.எஸ்.தீவிரவாதிகள் வெறியாட்டம்



(டமாஸ்கஸ்)

சிரியாவில் நடைபெற்ற உச்சக்கட்ட போரின்போது பொதுமக்களில் 116 பேரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்று குவித்த தகவல் வெளியாகியுள்ளது.

சிரியா நாட்டின் கிழக்கே ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் சில பகுதிகளை கைப்பற்ற அந்நாட்டின் அரசுப் படைகள் உச்சகட்ட தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

அவர்களுக்கு துணையாக அமெரிக்கா மற்றும் ரஷ்யா நாட்டின் போர் விமானங்களும் வான்வழி தாக்குதலை நடத்துகின்றன.

யூப்ரட்எஸ் ஆற்றுப்பகுதியில் டெய்ர் அல் ஸோர் மாகாணத்தில் உள்ள முக்கிய நகரமான அல் மயாடின் நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் இருந்து அரசுப் படைகள் கடந்த மாதம் மீட்டன. இங்கிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அல் ஓமர் பெற்றோல் வயலை அமெரிக்க படைகள் துணையுடன் சிரிய இராணுவம் கைப்பற்றியுள்ளது.

சிரியாவின் மிகப்பெரிய அல் ஓமர் பெற்றோல் வயலை அரசுப் படைகள் கைப்பற்றியுள்ளன.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான உச்சக்கட்டப் போரின் முக்கிய திருப்புமுனையாக கருதப்படுகிறது.

இந்நிலையில், சிரியாவில் நடைபெற்ற உச்சகட்ட போரின்போது கடந்த 20 நாட்களில் பொதுமக்களில் 116 பேரை அரசின் உளவாளிகள் என சந்தேகித்து ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்று குவித்ததாக அங்கு போர் நிலைமைகளை பார்வையிட்டுவரும் பிரிட்டன் நாட்டு மனித உரிமை கண்காணிப்பகத்தின் தலைவர் ரமி அப்தெல் ரஹமான் நேற்று தெரிவித்துள்ளார். (இ-7)

## சோமாலிய தாக்குதலில் படுகா[...] நலம்பெற வேண்டி நடைபெற்[...]




சோமாலியா நாட்டின் மொகாடிசுவில் நடைபெற்ற வெடிகுண்டுத்[...] யுள்ளனர். 56 பேரை காணவில்லை. மேலும், 230 பேர் படுக[...] வருகின்றனர். இந் நிலையில், படுகாயம் அடைந்து சிகிச்சை[...] நலம் பெறவேண்டும் என நாட்டின் பல்வேறு இடங்களில் கட[...] நடைபெற்றது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...த்துவிட்டது ...கூட்டணி



ரஷ்யாவின் சார்பில் தாக்குதல்கள் முன்னெடுக்கப்படும் போது, பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு, செயற்பாட்டாளர்களாலும் மேற்கத்தேய அரசியல்வாதிகளாலும் தொடர்ச்சியாக முன் வைக்கப்படும் போதெல்லாம் அவற்றை மறுக்கும் ரஷ்யா, தற்போது றக்கா மோதலில், பொது மக்கள் பாதிக்கப்பட்டனர் எனக் கூறுகிறது.

மேற்கத்தேயத்தின் குற்றங்களை மறைப்பதற்கு, றக்காவுக்கு நிதியுதவிகளை வழங்குவதற்கு, மேற்கத்தேயம் முயல்கிறது எனவும், அவர் மேலும் தெரிவித்தார். (இ)

பேச்சாளர் மேஜர் ஜெனரல் இகோர் கொஷென்கோவ், சிரிய முரண்பாட்டுக்கு முன்னர், றக்காவில் 2 இலட்சம் பேர் காணப்பட்டனர் எனவும், தற்போது 45 ஆயிரம் பேரே காணப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

## மேற்குலகின் பல நாடுகளுக்கு வட கொரியா பகிரங்கக் கடிதம்

(பியாங்யாங்)

மேற்குலகின் பல நாடுகளுக்கு வட கொரியா ஒரு பகிரங்கக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது. முன் எப்போதும் இல்லாத வகையில் வட கொரியாவால் அனுப்பப்பட்டுள்ள இக்கடிதம் பலத்த ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

வெறுக்கத்தக்கதும்பொறுப்பற்றதுமான டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தின் மீது அதீத கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு இக்கடிதம் மூலம் மேற்குலக நாடுகளை வட கொரியா கேட்டுள்ளது.

வடகொரியா முழுமையான அணு வல்லமை மிக்க நாடு என இக்கடிதம் அறிவித்துள்ளது. வட கொரியாவின் வெளியுறவுக் குழு ஒன்று இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாக தெரிய வருகிறது.



எந்தெந்த நாடுகளுக்கு இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை வட கொரியா வெளிப்படுத்தவில்லை. இந்நிலையில் இத்தகைய ஒரு கடிதம் தமக்கு கிடைத்திருப்பதாக அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை, முதற்தடவையாக தெரிவித்துள்ளது.

ஜகார்த்தாவிலுள்ள தமது இந்தோனேசிய தூதுவராலயத்திடம் தமக்கான கடிதம் கையளிக்கப்பட்டிருப்பதாக, அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் ஜூலி பிஷப் அறிவித்துள்ளார்.

வழமையாக தமது தேசிய செய்தி நிறுவனமான KCNA மூலம் மேற்குலகிற்குச் செய்திகளை தெரிவிக்கும் வட கொரியா, ஏன் இத்தகைய ஒரு கடிதத்தை அனுப்பியது என்பது தெரிய வரவில்லை. பலதரப்பட்ட நாடுகளின்நாடாளுமன்றிற்கு என முகவரியிடப்பட்டுள்ள இக்கடிதம் ட்ரம்பை எச்சரித்திருக்கிறது.

முழுமையான அணு வல்லமை கொண்ட வட கொரியாவை மண்டியிட வைக்க முடியும் என டொனால்ட் ட்ரம்ப் கருதுவது, அவரின் அறியாமையை வெளிக்காட்டும் ஒன்று என அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## ...கோடி பேர் ...றி தவிப்பு

கருதப்படுகிறது.

கண் பார்வையற்றவர்களில் பெரும்பாலானோர் ஆபிரிக்கா மற்றும் ஆசியா கண்டங்களில் உள்ளனர். பார்வையற்றவர்களில் மூன்றில் ஒரு பங்கு பேர் குழந்தைகள் ஆவர்.

இங்குள்ள பெரும்பாலான நாடுகளில் வறுமை, வன்முறை, ஆயுத கலாசாரம் மற்றும் வளர்ச்சியின்மை நிலவுகிறது.

இப்பிரச்சினைகளால் குழந்தைகளுக் கும், கர்ப்பிணிகளுக்கும் போதுமான சத்துணவு கிடைப்பதில்லை. அதனால் குழந்தைகளும், பெரியவர்களும் பார்வை இழக்கின்றனர்.

சீனா உள்ளிட்ட பல நாடுகளில் குழந்[...]களின் பிறப்பை பதிவு செய்வ[...]ல்லை. இதனால் குழந்தைகளின் உடல்நலம் குறித்த முழு தகவலும் அறிய முடிவதில்லை என உலக வங்கி தெரிவித்துள்ளது. (இ)

## இந்தியாவுக்கு ஆயுதங்களுடன் கூடிய ஆளில்லா உளவு விமானங்களை விற்க அமெரிக்கா பரிசீலனை

(வோஷிங்டன்)

தீவிரவாதத்தை கட்டுப்படுத்த இந்தியாவுக்கு ஆயுதங்களுடன் கூடிய ஆளில்லா உளவு விமானங்களை விற்பனை செய்வது தொடர்பாக அமெரிக்கா பரிசீலித்து வருகிறது.

தீவிரவாதிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும், தாக்குதல் நடத்தி அழிக்கவும் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் அமெரிக்கா ஆயுதங்களுடன் கூடிய ஆளில்லா உளவு விமானங்களைப் பயன்படுத்தி வருகிறது.



கடந்த ஜூன் மாதம் அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் மோடி, இத்தகைய உளவு விமானங்களை இந்தியாவுக்கு வழங்குமாறு அந்நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் கேட்டுக் கொண்டார். அதன்படி, ஆயுதங்கள் இல்லாத 22 கார்டியன் ரக விமானங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்க அரசு சம்மதித்தது.

இந்நிலையில், அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களுடன் கூடிய சி அவெஞ்சர் ரக ஆளில்லா உளவு விமானங்களை வாங்க இந்திய விமானப்படை தீர்மானித்துள்ளது. சுமார் 800 கோடி டொலர் செலவில் இவ்வகையிலான 100 விமானங்களை வாங்க இந்தியா விருப்பம் தெரிவித்துள்ள நிலையில் இதுதொடர்பாக அமெரிக்க அரசு பரிசீலித்து வருவதாக அந்நாட்டின் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-8)

## ஸ்பெயினின் கட்டளைகளை ஏற்கமாட்டோம்

### காட்டலோனியா அதிகாரிகள் அறிவிப்பு

(மட்ரிட்)

காட்டலோனியப் பிராந்தியத்தின் தன்னாட்சி உரிமையை மீளெடுத்து விட்டு அதனை மத்தியரசின் நேரடி ஆட்சிக்குள்ஸ்பெயின்கொண்டு வந்தால் ஸ்பெயினின் கட்டளைகளை ஏற்கமாட்டோம் என காட்டலோனிய நிர்வாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.



காட்டலோனிய நாடாளுமன்றம் நாளை வியாழக்கிழமை கூடவுள்ள நிலையில் காட்டலோனிய நிர்வாக அதிகாரிகளின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

காட்டலோனிய நாடாளுமன்றம் கூடும்போது காட்டலோனியத்தலைவர்கள் அதன் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிடலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

காட்டலோனியாவின் அதிகாரங்களை தனது நாடாளுமன்றத்தின் கீழ்கொண்டு வருவதற்கு ஸ்பெயின் அரசாங்கம் முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ...யமடைந்தவர்கள் ...ற பிரார்த்தனை



...தாக்குதலில் 358 பேர் பலியாகி ...காயம் அடைந்து சிகிச்சை பெற்று ... பெற்று வருபவர்கள் விரைவில் ...ந்த 20ஆம் திகதி பிரார்த்தனை ...ட்டிருந்தனர்.

## வடகொரியாவின் அணுவாயுதத்திட்டம் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல்

### சர்வதேச நாடுகளுக்கு தென்கொரியா எச்சரிக்கை

(பாரிஸ்)

வடகொரியாவின் அணுவாயுதத்திட்ட நடவடிக்கைகள், சர்வதேச சமூகத்தின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என, தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் காங் க்யூங் வா (Kang Kyung-wha) எச்சரித்துள்ளார்.

வடகொரிய நெருக்கடி தொடர்பில் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் ஜீன் ஈவ்ஸ் லே ட்ரையனை (Jean-Yves Le Drian) பாரிஸில்நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே, அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தபோது, 'வடகொரியாவானது அணுவாயுதம் மற்றும் ஏவுகணைத் திறன்களை துரிதகதியில் வளர்த்து வருகின்றது. இந்நிலையில், வடகொரியாவின் அணுவாயுதம் மற்றும் ஏவுகணைச் சோதனைகள் பாரிய அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. மேலும், வடகொரியாவின் அணு வாயுதம் மற்றும் ஏவுகணைச் சோதனைகளால் தென்கொரியாவுக்கோ அல்லது ஆசியாவுக்கோ மாத்திரம் அச்சுறுத்தல் அல்ல. இது சர்வதேச சமூகத்தின் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தலாகும் என்றார்.



'எனவே, வடகொரியாவின் அச்சுறுத்தலை முறியடிப்பதற்காக அமெரிக்காவுடன் மாத்திரம். தென் கொரியா ஒத்துழைக்கவில்லை.

ஜப்பானுடனும் தென்கொரியா ஒத்துழைக்க முற்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

**திவுலப்பிட்டிய பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ரன்டீர் ரோத்ரிகோவின் வீட்டிலிருந்து துப்பாக்கி ரவைகள் மற்றும் குண்டு துளைக்காத கவச சட்டை உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.**

நேற்று முன்தினம் பகல் திவுலப்பிட்டிய பகுதியில் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக கூறப்படும் குழுவொன்றுக்கும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இதற்கமைய, பல்வேறு வகையான ரவைகள் 115 இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து, ரன்டீர் ரோத்ரிகோவின் மனைவியை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இதன்போது ரன்டீர் ரோத்ரிகோ உள்ளிட்ட எழுவர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கொழும்பில் பங்களாதேஷ் போர்க்கப்பல்

(கொழும்பு)

பங்களாதேஷ் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

'சொமுத்ர அவிஜன்' என்ற பெயருடைய இந்தப் போர்க்கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த போது, இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.

நாளை 26 ஆம் திகதி வரை பங்களாதேஷ் போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ள நிலையில் அதில் உள்ள கடற்படையினர் இலங்கை கடற்படையினருடன் இணைந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர். (இ-7)



## இலங்கையில் முதற்தடவையாக

# விமானங்களைத் தயாரிக்கும் முயற்சியில் விமானப்படை!

## தளபதி கபில ஜயம்பதி தகவல்



(கொழும்பு)


இலங்கையில் முதற் தடவையாக விமானப் படையினர், விமானம் தயாரிப்பு பணியில் ஈடுபடவுள்ளதாக விமானப்படை தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி தெரிவித்தார். இதற்கான தொழில்நுட்ப ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தினால் உயிரிழந்த சகல விமானப்படை வீரர்கள், காணாமல் போனவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு ஆசி வேண்டி கண்டி தலதா மாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்ற மத அனுஷ்டானங்களில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

"விமானப்படையினூடாக விமானங்களை நிர்வகிக்கும் நடவடிக்கைகளே இடம்பெற்றுள்ளன. பாதுகாப்பு செயலாளரின் ஆலோசனைக்கமைய விமானங்களை இங்கு தயாரிப்பதற்குத் தேவையான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேவையான இடம், சூழல், உற்பத்தி பணிகள் நிறைவடைந்த பின்னர் அடுத்த வருடம் முதல் விமானங்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். யுத்த காலத்தில் யுத்தம் காரணமாக விமானங்கள் சேதமடைந்தாலும் தற்பொழுது பறவைகளினால் சேதம் ஏற்படுகிறது.

எமது நாட்டிற்குரிய சர்வதேச கடற்பரப்பை பாதுகாப்பதற்கும், நாட்டிற்குள் சட்டவிரோதமாக பொருட்கள் எடுத்து வரப்படுவதை தடுக்கவும் கடற்படையுடன் இணைந்து கண்காணிப்பு மற்றும் விசேட பாதுகாப்பு முன்னெடுப்புகளை செய்து வருகின்றோம். எமது நாட்டில் விமானங்களை உற்பத்தி செய்யும் அதேவேளை, நாட்டிற்கு உகந்த தொழில்நுட்பத்துடன் கூடிய விமானங்களை இறக்குமதி செய்வதற்கும் விமானப் படை திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கண்காணிப்புக்காக ஸ்கூட்டியில் சென்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா



(கொழும்பு)

அமைச்சர் பைஸர் முஸ்தபா தனது அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை கண்காணிப்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அமைச்சர் பைஸர் முஸ்தபா அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்குரிய அதிகாரங்களை தேவையற்ற வகையில் பயன்படுத்தமாட்டார் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

# மறுபடி வருமா?

ஊரிலிருந்து உறவினர்கள் பலரும் வந்திருக்கிறார்கள். எல்லாரும் கடற்கரைக்குப் போகிறார்கள். என்னைக் கேட்கிறார்கள்.

"வாருங்களேன் ஜாலியாகப் போய் விட்டு வரலாம்"

"பரவாயில்லை. நீங்கள் போய் வாருங்கள். எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்கிறேன். எல்லாரும் சென்று விட்டார்கள். நான் மட்டும் இருக்கும் போது சொஞ்சம் சிந்தித்துப் பார்க்கிறேன்.

சே! என்ன மடத்தனம்! வேலை என்பது எப்போதும் தான் இருக்கிறது. மறுபடி இவ்வளவு உறவுக்காரர்கள் ஒன்று சேர்ந்து புறப்படுவது சாத்தியப்படுமா? இயந்திரமயமான வாழ்க்கைக்கே எப்போதும் பழக்கப்பட்டுப்போன நாம் ஒரு மாறுதலுக்காகக் கிடைத்த அரிய வாய்ப்பை இழந்துவிட்டோமே! என்கிற ரீதியில் எண்ணங்கள் செல்கின்றன. சற்றே சோகமாகின்றேன்.

ஏங்க ரிஷப்சனுக்கு வரலை? என ஒருவர் கேட்க– கொஞ்சம் வேலையாய்ப் போச்சு என்கிறார் மற்றவர்.

எங்கோ நடந்த திருமணத்துக்குத் தான் போக முடியவில்லை. ஏழெட்டுக் கிலோ மீற்றர் தூரத்தில் நடந்த வரவேற்புக்குச் செல்லக் கூட சாக்குப் போக்குத் தேடுவதா?

நாம் மிச்சம் செய்து விட்ட அந்த இரண்டு மணி நேரத்தில் அப்படி என்ன சாதித்து விட்டோம்? மறுபடி இதே ரிசப்ஷன் நடக்குமா? நடக்காது. ஆனால் நாம் மிச்சப்படுத்திய இரண்டு மணி நேரம் நமக்கு எப்போது வேண்டுமானாலும் கிடைக்குமே! இந்தக் கோணத்தில் ஏன் இனிச் சிந்திக்கக் கூடாது?

குடும்பத்தில் எல்லாரும் ஒன்றுகூடி நல்ல அரட்டை மன நிலையுடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாம் மட்டும் விலகி நிற்கிறோம். அல்லது வெளியில் போய் விடுகிறோம். திரும்பி வந்ததும் இப்படி அரட்டை அடித்து எத்தனை வருசமாச்சுத் தெரியுமா! என்கிறார்கள் எல்லாருமாய். அடடே நல்ல சந்தர்ப்பத்தை இழந்துவிட்டோமே! என்று பின்னால் வருத்தப்படுகிறோம்.

பிறிதொரு சந்தர்ப்பம் வாய்க்காது. அச்சந்தர்ப்பம் அரிதானது என்கிற நிலைமை நிலவினால் அதை நழுவ விடக் கூடாது.

பல சந்தர்ப்பங்களில் நடந்தவை நடந்தவையாகவே ஆகிச் சரித்திரங்களாகி விடுகின்றன.

அவை மறுபடி நிகழ்வதே இல்லை.

இனியாவது எவை முக்கியம், எது திரும்ப வாய்க்கும், எது திரும்ப வாய்க்காது என்கிற கண்ணோட்டத்தில் சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வருவோம்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அமைச்சர் ஒருவரை பராமரிக்க 700 கோடி செலவு



## றில்வின் சில்வா தகவல்

(கொழும்பு)

அரசாங்க அமைச்சர் ஒருவரை பராமரிப்பதற்கு அரசாங்கம் 700 கோடி ரூபாவினை செலவிடுவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் றில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அமைச்சர் ஒருவரை பராமரிப்பதற்கு ஆண்டு ஒன்றுக்கு 700 கோடி ரூபாவினை மக்கள் செலவிட நேரிட்டுள்ளது.

இதனால் உண்மையிலேயே மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மக்களை அணி திரட்டும் கிராமிய மட்டத்திலான திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும்.


கிராமிய மட்டத்தில் இது குறித்து மக்களுக்கு தெளிவூட்ட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் ஆட்சியாளர்கள் வரப்பிரசாதங்களை அனுபவித்து வருகின்றனர் என அவர் தெரிவித்தார். (இ-7)




# புதிய அரசியலமைப்புக்கு நான் எதிர்ப்பு; மகாநாயக்கர்களுக்கு மதிப்பளியுங்கள்

## மகிந்த அரசிடம் வேண்டுகோள்



(கொழும்பு)

புதிய அரசியலமைப்புக்கு தான் எதிர்ப்பு எனவும் மகாநாயக்கர்களின் கருத்துக்கு மதிப்பளித்து அரசாங்கம் செயற்பட வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை இந்த உத்தேச அரசியல் யாப்பு தொடர்பான அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதத்துக்கு விடப்படவுள்ளதாகவும் இதன்போது பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வீர்களா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவர் ஆம் எனத் தலையசைத்து பதிலளித்தார். (இ-7)

# கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை அந்தந்த மாகாணங்களில் நியமிக்குக

## அகிலவிராஜிடம் றிசாத் கோரிக்கை

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுக்கு, வழங்கப்பட்டிருக்கும் நியமனங்களை மீள்பரிசீலனை செய்து, அதனை ஆசிரியர்களுக்கு உரித்தான தத்தமது மாகாணங்களுக்கு வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசமிடம், அமைச்சர் றிசாத் பதியுதீன் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்கள் வதியும் மாகாணங்களில் ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கும் நிலையில், வேறு மாகாணங்களுக்கு கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை நியமித்துள்ளமையை உடனடியாக இரத்துச் செய்து, அந்தந்த மாகாணங்களிலுள்ள வெற்றிடங்களுக்கு அவர்களை நியமிக்குமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களை வேறு மாகாணங்களுக்கு அனுப்புவதன் மூலம் அவர்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதெனவும் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்குப் பயணம் செய்வதிலேயே காலம் கழியும் எனவும் பல்வேறு போக்குவரத்துச் சிரமங்கள் ஏற்ப டும் எனவும் அமைச்சர் றிசாத் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமக்குப் பரிச்சயமான சூழலில் கல்வி கற்பிப்பது, ஆசிரியர்களுக்கு வசதியானது எனச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் றிசாத் பதியுதீன், இதன் மூலம் மாணவர்களுக்கும் உச்ச பலன் கிடைக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இதனைக் கருத்திற் கொண்டு ஆசிரியர்களுக்குச் சொந்தமான மாகாணங்களில் அவர்களுக்கு நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் றிசாத் மேலும் கோரியுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் றிசாத் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சைட்டம் தொடர்பான ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமைச்சர்களே தடை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிப்தி மைத்திரிபால சிறிசேனவின் சைட்டம் தொடர்பான காத்திரமான தீர்மானத்துக்கு ஓரிரு அமைச்சர்களே தடையாகவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

ஜனாதிபதியும் பிரதமரும் இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கத்தின் தீர்மானத்தை அறிவிப்பதாக கூறியுள்ளனர். இவர்களை உரிய தீர்மானம் எடுக்க விடாமல் அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, ராஜித சேனாரத்ன ஆகியோர் தடைக் கல்லாக உள்ளதாகவும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (இ-7)

# சைட்டத்தைப் பிரச்சினைப்படுத்தியவர்கள் வைத்தியர்களே- அமைச்சர் கிரியெல்ல சாடல்

(கொழும்பு)

சைட்டம் பிரச்சினைக்கு இன்னும் இறுதித் தீர்மானம் ஒன்றுக்கு வரவில்லை எனவும் பல்வேறு விடயங்களை முதன்மைப்படுத்தி கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வார இறுதிக்குள் தீர்மானம் ஒன்றுக்கு வரவுள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

சைட்டம் பிரச்சினையை ஆரம்பித்து மருத்துவ பீட மாணவர்களின் கல்வியை குழப்பியது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர்கள் தான். கொழும்பு பல்கலைக்கழகத்தில் 40, 50 மருத்துவ பீட ம்ாணவர்கள் விரிவுரைக்கு வருகை தந்த போது அவர்களை விரிவுரை நடைபெற மாட்டாது



எனத் திருப்பியனுப்பியவர்கள் மருத்துவர்கள் தான். தற்பொழுது பிரச்சினையை எம்மீது போடுகின்றனர் எனவும் அமைச்சர் ஜி.எம்.ஓ. உறுப்பினர்களை சாடினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னும் ஓரிரு தினங்களில் சைட்டம் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, அரசியல் ரீதியாக நாடு பிளவுபடுமானால் வளர்ச்சிப் பாதைக்கு இட்டு செல்லமுடியாது

## சபாநாயகர் கருஜெயசூரிய சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இன ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நாடு பிளவுபடுமானால் நாட்டை எம்மால் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியாது. உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளியை நீக்கினால் நாடு வளர்ச்சியடையும். எனவே குறித்த இடைவெளியை நீக்க வேண்டியது அரசாங்கத்தின் பாரிய பொறுப்பாகும் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இன ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் நாடு பிளவுபடுமானால் நாட்டை எம்மால் வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்ல முடியாது. எனவே சக வாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதன் ஊடாக மாத்திரமே நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும். உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி காரணமாகவே உலகில் புரட்சிகள் ஏற்படுகின்றன. எமது நாட்டிலும் இளைஞர்களினால் பல போராட்டங்கள் நடந்தமையினால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன.



இதன்பிரகாரம் உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி நீக்கப்பட வேண்டும். இதனை நீக்கினால் நாடு வளர்ச்சியடையும். எனவே குறித்த இடைவெளியை நீக்க வேண்டியது அரசாங்கத்தின் பாரிய பொறுப்பாகும். இதன் பிரகாரம் வறுமையை ஒழித்து அதிகளவில் தொழில் வாய்ப்புகளை வழங்கி நாட்டை முன்னேற்ற பாதைக்கு இட்டுச்செல்ல வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவின் அழைப்பை நிராகரித்த அமைச்சர்

(கொழும்பு)

தம்முடன் அரசியலில் இணையுமாறும் தமது வர்த்தகநடவடிக்கைகளில் இணையுமாறும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை தாம் நிராகரித்ததாக ஆரம்பகைத்தொழில் துறை அமைச்சர் தயாக மகே தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ தமக்கு அமைச்சுப் பதவி ஒன்றை வழங்க முன்வந்தபோதும் பொதுமக்களின் பணத்தை கொள்ளையிட தாம் விரும்பவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் மைத்திரிபால சிறிசேனவுடன் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்றும் தயாகமகே கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# அதிபர் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் அமைந்துள்ள யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

இப் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் II இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரம் II இனைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதபட்சத்தில் இலங்கை அதிபர் சேவை தரம் III இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும். தீவக வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சேவையாற்றும் இ.அ.சேவை தரம் II, III இனைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப்பிரிவில் பெற்று எதிர்வரும் 10.11.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரில் அல்லது "வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தீவகம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளார். (இ-7)

## பொருளாதார நெருக்கடி மிக்க

# உயர்தர மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க ஜனாதிபதி மைத்திரி அதிகாரிகளுக்குப் பணிப்பு

(கொழும்பு)

2019ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பொருளாதார நெருக்கடி மிக்க மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.



இது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். புலமைப்பரிசிலுக்குரிய மாணவர்களை தெரிவு செய்வதற்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஒரு கல்வி வலயத்திற்கு 100 மாணவர்கள் வீதம் இந்தப் புலமைப் பரிசிலை வழங்க கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது. புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு 24 மாதங்களுக்காக 500 ரூபா வீதம் மாதாந்தம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை வங்கியுடன் இணைந்து கல்வி அமைச்சு இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்க உள்ளது. (இ-7)

# ஆசிரியர்களின் நலனுக்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன்

## பிரதீபா பிரபா 2017 விருது வழங்கும் விழாவில் கல்வியமைச்சர்



(கொழும்பு)

இந்நாட்டில் கல்வித்துறையிலுள்ள அனைத்து ஆசிரியர்களினதும் நலன்கருதி அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஆசிரியர் சேவையின் சிறந்த ஆசிரியர்களை பாராட்டுமுகமாக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற குரு பிரதீபா பிரபா 2017 விருது வழங்கும் விழாவின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது கல்வித்துறையில் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்கின்றார்கள். புதியவற்றை அறிந்து சிறந்த அனுபவங்கள் மூலம் சிறப்பான கல்வியை வழங்க சிறந்த மாணவர்களை உருவாக்கவல்ல ஆசிரியர்களாக அவர்கள் அனைவரினதும் தொழில் அபிவிருத்தியை ஏற்படுத்த அரசாங்கம் தனது முழுக்கவனத்தையும் மேற்கொண்டுள்ளது என அமைச்சர் கூறினார். இதுவரை எந்தவொரு அரசாங்கமும் அக்கறைகாட்டாத அளவு இவ் அரசாங்கம் ஆசிரியர்கள் குறித்து அக்கறை எடுத்து வருகிறது. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு வெளிநாட்டு, உள்நாட்டு பயிற்சிகளை வழங்கியுள்ளது. அதற்காகஇரண்டுபில்லியன்ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதுவரை பூர்த்தி செய்யப்படாத வெற்றிடங்களை நிரப்பியுள்ளதாகவும் எவ்வித அரசியல் தலையீடுமின்றி 4000 அதிபர்களையும் 1500 நிர்வாக அதிகாரிகளையும் நியமிக்க முடிந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி இடம்பெற்ற ஆசிரியர் தினத்திற்கு இணைந்ததாக இவ்விருது வழங்கும் விழாவில் 114 அதிபர்களும் 252 ஆசிரியர்களும் விருதுகளைப் பெற்றனர்.

இதேவேளை பிரிவேனா அதிபர்கள், பிரிவேனா ஆசிரியர்கள் 18 பேருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. இங்கு உரையாற்றிய சபாநாயகர் கரு ஜெயசூரிய, கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கல்வித்துறையின் வளர்ச்சிக்காக ஆற்றும் பணியைப் பாராட்டினார். (இ)

## 30-ம் திகதிக்கு முன்

# சாதாரண தர மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

இம்முறை கல்விப் பொது தராதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் தேசிய அடையாள அட்டையை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வழங்க ஆட்களைப் பதிவு செய்யவும் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய அடையாள அட்டையைப் பெற இதுவரை விண்ணப்பிக்காத பாடசாலைகள் இருப்பின் உடனடியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர்நாயகம்வியாணி குணதிலக கூறினார். நாடு பூராகவும் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் வருட ஆரம்பத்திலேயே குறிப்பிட்ட விண்ணப்பப்படிவங்களை மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தாலும் சில பாடசாலை அதிபர்கள் சரியான முறையில் செயற்படாததால் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதில் சிரமமேற்படுமெனவும் அவர் தெரிவித்தார். (இ)

# விபத்துக்குள்ளான துருக்கி விமானம் நேபாளத்தில் அருங்காட்சியகமானது

(காத்மண்டு)

கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் துருக்கி ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் 'ஏர்பஸ் ஏ 330' ரக விமானம் நேபாள தலைநகர் காத்மண்டு விமான நிலையத்தில் தரை இறங்கிய போது ஓடுதளத்தைவிட்டு விலகி ஓடி விபத்துக்குள்ளானது.



அதில் 224 பேர் பயணம் செய்தனர். அவர்களில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆனால் விபத்துக்குள்ளான அந்த விமானத்தை அங்கிருந்து அகற்ற 4 நாட்களானது. தற்போது அந்த விமானம் காத்மண்டுவில் அருங்காட்சியகம் (மியூசியம்) ஆக மாற்றப்பட்டுள்ளது. அதற்கான முயற்சியை விபத்துக்குள்ளான விமானத்தின் விமானி பெட் அவ்ரெடி மேற்கொண்டார். 63 மீற்றர் நீள விமானத்தை 10 துண்டுகளாக உடைத்து லொறிகளில் ஏற்றி அப்புறப்படுத்தப்பட்டது. அதற்கான பணியில் துருக்கி பொறியியலாளர் குழு ஈடுபட்டது. பின்னர் உடைக்கப்பட்ட துண்டுகளை மீண்டும் ஒட்ட வைத்து ஒன்றிணைக்கப்பட்டது. அதற்காக 2 மாதம் இரவு- பகலாக பணி நடைபெற்றது. அதன் பின்னர் அழகிய அருங்காட்சியகம் ஆனது. தற்போது இதுவே நேபாளத்தின் முதல் விமான அருங்காட்சியகமாகும்.

இதன் இறுதிக்கட்டப் பணிகள் முடிவடைந்ததும்விரைவில் பொதுமக்களின் பார்வைக்கு திறந்து வைக்க உள்ளார் விமானிஅப்ரெடி. (இ)

# பெண் சாரணிய ஆணையாளராக நீலா மீண்டும் தெரிவு

(கொழும்பு)

வடமாகாண பெண்கள் சாரணிய ஆணையாளராக திருமதி நீலா தர்மகுலசிங்கம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த வார இறுதியில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பெண்கள் சாரணியத்தின் தேசிய மாநாட்டில் இதற்கான சின்னம் அவருக்குச் சூட்டப்பட்டது.

2009 முதல் 2012 வரை நீலா தர்மகுலசிங்கம் வடமாகாண பெண்கள் சாரணிய ஆணையாளராகப் பணியாற்றியிருந்தார். அதன் பின்னர் அவர்யாழ்மாவட்டஆணையாளர் பொறுப்பை ஆற்றி வந்தார்.



யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, பெரியபுலம் ம.வி. ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியையான நீலா தர்மகுலசிங்கம் யாழ்.சிற்றி றோட்டறிக் கழகத்தின் தலைவராவார். அவர் 'இன்னர்வீர்' கழகத்தின் முன்னாள் தலைவி என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுகளை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டதிட்டங்கள் அமுல்படுத்தப்படும்

## ஜனாதிபதி மைத்திரி எச்சரிக்கை



(கொழும்பு)

காடுகளை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி எச்சரித்தார். நாட்டின் வனப் பரம்பலைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாங்கம் விசேட அவதானத்துடன் செயற்படுவதுடன், அதற்கான அனைத்து செயற்பாடுகளும் தாமதமின்றி நிறைவேற்றப்படும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஆசிய பசுபிக் வலய நாடுகளின் வனப்பரம்பல் பற்றிய ஆணைக்குழுவின் 27 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"புதிய தரை தோற்றங்களில் காடுகள்" எனும் தொனிப் பொருளில் ஆசிய பசுபிக் வலய நாடுகளின் வனப் பரம்பல் பற்றிய ஆணைக்குழுவின் 27ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமாகியதுடன், எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

காடுகளை முகாமைத்துவம் செய்வதற்கான வழிகாட்டல்களை உருவாக்குதல், வலய ரீதியில் வனப் பரம்பல் மற்றும் புவி அமைவுகளை சீரமைப்பதற்கான வழிமுறைகளை அங்கீகரித்தல், நகர அமைவுகளிற்கேற்ப தாவரங்களின் பரம்பல், உணவு மற்றும் போசணைப் பாதுகாப்பிற்கான வனாங்களின் பங்களிப்பு, காடுகளை முகாமை செய்வதற்குரிய புதிய சமூக அணுகுமுறைகள் மற்றும் 2020 ஆம் ஆண்டில் வன வளங்களை மதிப்பீடு செய்தல் போன்ற தலைப்புக்களில் இதன்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

ஆசிய பசுபிக் வலய வனப் பரம்பல் பற்றிய ஆணைக் குழுவின் 34 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் பல்வேறு மட்டத்திலான கண்காணிப்பு நிறுவனங்களின் 300 பிரதிநிதிகளும் இக் கூட்டத்தொடரில்கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, சுற்றாடல் பாதுகாப்பிற்கான பாரிஸ் மாநாட்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம் உள்ளிட்ட ஏனைய சர்வதேச பிரகடனங்களை உரியவாறு பின்பற்றுவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன் தேசிய ரீதியில் அதற்கான் செயற்றிட்டங்கள் பலவும் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக உலக நாடுகளுக்கு நிதியுதவிகளை வழங்கும்போது தமது நாட்டில் வனாங்களின் அடர்த்தியை அதிகரிப்பதற்கும் சூழலை பாதுகாப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படும் நாடுகளுக்கு கூடுதல் ஒத்துழைப்பினை வழங்குவதற்கான நடைமுறையொன்றினை சர்வதேச ரீதியில் செயற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கினார். இதனூடாக சுற்றாடலை பாதுகாப்பதற்கு நாடுகள் அதிக அக்கறையுடன் செயற்படுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

முன்னொருபோதும் ஏற்படாத வகையில் உலக நாடுகள் பலவும் தற்போது பாரிய காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களினால் ஏற்படும் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளதுடன், உலகளாவிய ரீதியில் ஏற்படும் சுற்றாடல் சீர்கேடுகள் காரணமாக மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களினதும் நிலவுகைக்கு இன்று இயற்கையினால் சவால் விடுக்கப்பட்டுள்ளதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் காடுகளின் பாதுகாப்பு தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களில் கல்விமான்கள், ஆய்வாளர்கள் உள்ளிட்ட அனைவரது வழிகாட்டல்களும் மிக முக்கிமானவையென இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் செயற்படும் அரச நிறுவனங்களுக்கு விசேட வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

அமைச்சர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, சுசில் பிரேமஜயந்த, பிரதி அமைச்சர் அனுராத ஜயரட்ன, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் வனப்பிரிவின் உதவிப் பணிப்பாளர் நாயகம் ஹிரோட்டோ மிட்சுகி, சர்வதேச விவசாய, வனாந்தர ஆய்வுகள் பற்றிய பேரவையின் தலைவர் டோனி சைமன் உள்ளிட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் வனப்பாதுகாப்பாளர் நாயகம் எஸ்.ஏ. அநுர சத்துருசிங்க உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# ஜப்பானுடன் பலமான உறவை கட்டியெழுப்ப இலங்கை விருப்பம்



(கொழும்பு)

ஜப்பானின் பிரதமராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஷின்சோ அபேக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஜப்பானிய நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் மொத்தமுள்ள 465 இடங்களில் 300 இற்கும் மேற் பட்ட இடங்களில் பிரதமர் ஷின்சோ அபேயின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

இதுகுறித்து டுவிட்டரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்து தெரிவித்து பதிவு இட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் டுவிட்டரில் ஜப்பானியப் பிரதமருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளதுடன், ஜப்பான்- இலங்கை ஒத்துழைப்பை பலமாக கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1228

Search for people, places and things | Nagendram Home

### அனித்தா




### தேனுகன்




### சரவணன்




### கோபி




### சந்தியா




### பிரபா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் நீதிமன்று உத்தரவிட்டு மூன்று ஆண்டுகளாகியும் எந்த நடவடிக்கையும் இல்லை

# தமிழகத்தில் கந்துவட்டி சட்டத்தை கண்டுகொள்ளாத பொலிஸார்

கந்துவட்டி தொடர்பாக உயர் நீதிமன்றம் முன்பு பிறப்பித்த உத்தரவை பொலிஸார் அமுல்படுத்தியிருந்தால், நெல்லையில் கந்து வட்டி கொடுமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் தீக்கு ளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

தமிழகத்தில் இருப்பது போன்று கேரள மாநிலத்திலும் கந்து வட்டி கொடுமை தலை







விரித்தாடியது. இதனால் திருவனந்தபுரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் தற்கொலை செய்து கொண்டனர்.

இச்சம்பவம் கேரளா முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து மாநிலம் முழுவதும் கந்து வட்டி வசூலிப்பவர்களைக் கைது செய்வதற்காக 'ஆபரேஷன் குபேரா' என்ற பெயரில் ஒரு திட்டத்தை அந்த மாநில அரசு செயற்படுத்தியது.

### 'ஆபரேஷன் குபேரா' அதிரடி

இந்த திட்டப்படி 2014ஆம் ஆண்டில் மே, ஜூன் மாதங்களில் கேரளா முழுவதும் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையால் கந்து வட்டி வசூலித்த 773 பேர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர். கந்து வட்டி தொடர்பாக 1,448 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ரூ.4.18 கோடி பறிமுதல் செய்யப்பட்டது.

தொடர்ந்து கந்து வட்டி வசூலில் தொடர்புடையவர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்யவும் மாநில அரசு உத்தரவிட்டது.

'ஆபரேஷன் குபேரா' நடவடிக்கைக்கு தடை கோரி கேரள உயர் நீதிமன்றத்தில் அங்குள்ள நிதி நிறுவனங்கள் சார்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றை நீதிமன்றம் நிராகரித்தது.

கேரள அரசின் இந்த நடவடிக்கையை தமிழகத்திலும் பின்பற்ற வேண்டும் என உயர் நீதிமன்ற நீதிபதி என். கிருபாகரன் 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் உத்தரவிட்டார்.

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் சுந்தரம். இவர் இமானுவேல் என்பவரிடம் ரூ.11 இலட்சம் கடன் வாங்கியிருந்தார். இதற்காக ரூ.85 இலட்சம் மதிப்புள்ள 22 கடைகள், 4 வீடுகள் கொண்ட சொத்தை அபகரித்துக் கொண்டதாக இமானுவேல், அவரது 2 மருமகன்கள் உட்பட 4 பேர் மீது காரியாபட்டி பொலிஸ் நிலையத்தில் சுந்தரம் புகார் அளித்தார். பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால் சுந்தரம் உயர் நீதிமன்றத்தை நாடினார்.

இந்த வழக்கில் நீதிபதி பிறப்பித்த உத்தரவில் தமிழகத்தில் 2003இல் கந்து வட்டி தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் வந்த பிறகு தான் கந்து வட்டியின் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியவந்தது.

கடன் கொடுத்தவர்கள், கடனை திரும்ப வசூலிக்க [illegible] சேர்ந்து அப்பாவிகள் மீது நடத்தும் மூன்றாம் தர நடவடிக்கையால் ஏராளமானோர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

கேரளாவில் கந்து வட்டி வசூலைத் தடுக்க 'ஆபரேஷன் குபேரா' என்ற பெயரில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதேபோன்று தமிழகத்திலும் கந்து வட்டி வசூலிப்போர் மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு சரியான நேரம் இதுவே.

தமிழகத்தில் கந்து வட்டி வசூல் செய்பவர்கள் மீதான புகாரை விசாரிக்க தனிப் பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

### சொத்தை பறிமுதல் செய்யலாம்

இதுதொடர்பாக உயர் நீதிமன்ற கிளை சட்டத்தரணி ஆர். காந்தி, 'த ஹிந்து' விடம் கூறியதாவது, கந்து வட்டி வசூல் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும், தேவைப்பட்டால் அவர்களது சொத்துகளை பறிமுதல் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும் என கந்து வட்டி தடை சட்டத்தில் தெளிவாக உள்ளது. இச்சட்டத்தை முறையாக அமுல்படுத்தினாலே கந்து வட்டி கொடுமையை ஒழித்து விடலாம்.

### பொலிஸ் அலட்சியமே காரணம்

இந்த சட்டத்தை அமுல்படுத்துவதில் பொலிஸார் காட்டும் அலட்சியமே தற்கொலை சம்பவங்களுக்கு முக்கிய காரணமாகும்.

பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்படும் எந்தப் புகாராக இருந்தாலும் புலன் விசாரணை செய்யக் கூடிய குற்றச்சாட்டுகள் இருந்தால் உடனடியாக வழக்குப் பதிவு செய்ய வேண்டியது பொலிஸாரின் கடமை.

இந்த கடமையை பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் உறுதி செய்துள்ளன. இருப்பினும் கந்து வட்டி தொடர்பான புகார்களை பொலிஸார் அஜாக்கிரதையாக கையாள் கின்றனர் என்றார்.

**த ஹிந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் விடுதலை தாமதமானால் கொழும்பில் தொடர் போராட்டம் வெடிக்கும்




## அருட்தந்தை சக்திவேல் எச்சரிக்கை

(கொழும்பு)

உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் வழக்கினை வவுனியா நீதிமன்றிற்கு உடனடியாக மாற்ற வேண்டும்.

இவ் விடயத்தில் அரசாங்கம் விரைந்து செயற்படாது இழுத்தடித்தால் கொழும்பில் தொடர் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாக தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு எச்சரித்துள்ளது.

நீதி அமைச்சிற்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அவ்வமைப்பின் தேசிய அமைப்பாளர் அருட்தந்தை ம.சக்திவேல் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராட்டத்தினை முன்னெடுத்துள்ளோம். இது இரண்டாவது தடவையாக கொழும்பில் நடைபெறுகின்றது.

எனினும் உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் கோரிக்கை தொடர்பில் தொடர்ந்தும் பாராமுகமான நிலைமையே நீடித்து கொண்டிருக்கின்றது. இந்த நிலைமை தொடர்வதற்கு இடமளிக்க முடியாது.

இப்பிரச்சினைக்கு விரைந்து பதிலளிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகின்றது என்பதை ஆணித்தரமாக கூற விரும்புகின்றோம்.

நாங்கள் தற்போது நீதி அமைச்சின் முன்னால் ஒன்றுகூடி உரிய நடவடிக்கை எடுக்குமாறு குரலெழுப்புவதோடு மகஜரையும் கையளித்துள்ளோம்.

கைதிகளின் நியாயமான கோரிக்கையை நீதித்துறை கவனத்தில்கொள்ள வேண்டும்.

சட்டமா அதிபர் தன்னிச்சையாக செயற்படமுடியாது. ஆகவே இந்த விடயங்கள் தொடர்பில் பொறுப்பற்ற நிலை தொடருமாகவிருந்தால் நாங்கள் நிச்சயமாக தொடர் போராட்டங்களை தலைநகரில் முன்னெடுப்போம். இதனை தவிர்க்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 40 போதை மாத்திரைகளுடன் திருகோணமலையில் இருவர் கைது

(திருகோணமலை)


திருகோணமலை, 4 ஆம் கட்டை ம்துபானசாலைக்கு முன்னால் 40 போதை மாத்திரைகளுடன் இருவரை நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாக திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து சந்தேகநபர்களை சோதனையிட்ட போது இருவரிடமும் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும், திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## அரசியல் கைதிகளின் விடுதலை கோரி...





(கொழும்பு)

கொழும்பு, புதுக்கடை பிரதேசத்தில் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி அமைதி போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அங்கு கீழாடை இன்றி புத்தகம் ஒன்றுடன் வந்த நபர், தனது எதிர்ப்பை வெளியிட்ட விடயம் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

ராஜினி திராணகம, ராஜன் ஹூல், தயா சோமசுந்தரம், கே.ஸ்ரீதரன் போன்றவர்கள் அந்த புத்தகத்தின் எழுத்தாளர்களாவர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை நிபந்தனை இன்றி உடனடியாக விடுதலை செய்யுமாறும் அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட தமது வழக்குகளை மீண்டும் வவுனியா நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு கோரியும் அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 30 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மூன்று அரசியல் கைதிகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7-9)

## வசந்த சேனநாயக்கவுக்கு மீண்டும் அழைப்பாணை



(கொழும்பு)

சட்டவிரோதமாக யானைக் குட்டி வைத்திருந்த குற்றச்சாட்டில், உடுவே தம்மாலோக தேரருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முதல் சாட்சியாளரான, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்கவுக்கு, நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்த வழக்கின் சாட்சிவிசாரணைகள்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்படவிருந்தது.

இருப்பினும், வசந்த சேனநாயக்க நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இந்தநிலையில், இராஜாங்க அமைச்சர் அத்தியாவசிய கடமை காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது போனதாக, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சிரேஷ்ட சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரியப்படுத்தினார்.

இதன்படி, அவரை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்க உத்தரவிடுமாறு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன், வழக்கின் அடுத்த கட்ட சாட்சி விசாரணைகள் நவம்பர் 27ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-7)

## இறந்த மெய்ப்பாதுகாவலரின் வீட்டை தேடிச்சென்ற நீதிபதி இளஞ்செழியன்

(கொழும்பு)


நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த மெய்ப்பாதுகாவலரின் 90ஆவது நாள் கிரியைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இதில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனும் கலந்து கொண்டிருந்தார்.

நீதிபதி இளஞ்செழியனின் 17 வருட மெய்ப்பாதுகாவலராக செயற்பட்டு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஹேமச்சந்திரவின் குடும்பத்திற்கு தொடர்ந்தும் நீதிபதி இளஞ்செழியன் உதவிகளை செய்து வருகின்றார்.

இந்த நிலையில் 90ஆம் நாள் கிரியையிலும் தவறாது கலந்து கொண்டுள்ளமையானது அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 22ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்கு



வைத்து நல்லூர் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 57 வயதான பொலிஸ் உத்தியோகத்தர் ஹேமச்சந்திர அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## "ஜனாதிபதி தந்தை" நூலுக்காக சதுரிகாவை பாராட்டிய நாமல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் சதுரிகா சிறிசேன எழுதி வெளியிட்ட "ஜனாதிபதி தந்தை" புத்தகம் தன்னால் கொள்வனவு செய்யப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்த புத்தகத்தில் தான் அறிந்த மைத்திரிபால சிறிசேன குறித்தே உள்ளதாகவும், புத்தகத்திற்காக சிறந்த முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறித்து புத்தகம் எழுதுவதற்கு எண்ணம் உள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் நாமலிடம் வினவியுள்ளார்.

தனக்கு புத்தகம் எழுதும் திறன் இல்லை என நாமல் குறிப்பிட்டுள்ளார்.

எப்படியிருப்பினும், சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வாராந்தம் கடிதம் ஒன்று எழுதி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## முயற்சி திருவினையாக்கும்!

ஒரு கிராமத்தில் ஒரு பாட்டி இருந்தாள். அவளுக்கு ஒரு பேரன் இருந்தான். அவன் பெயர் நம்பி. நம்பிக்குப் பெற்றோர் கிடையாது. அவன் உறவெல்லாம் பாட்டி மட்டுமே. மிகவும் ஏழையான இவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக தினமும் வயலில் கூலி வேலை செய்து வந்தனர். பாட்டி வயலில் வேலை செய்யும் பொழுது நம்பி மாடுகளை மேய்த்து விட்டு வருவான். சூரியன் மறைந்த பிறகே இருவரும் வீடு திரும்புவார்கள்.

இந்த நிலையில் நம்பிக்குப் படிக்கவேண்டும் என்று மிகவும் ஆசை. அவன் மாடு மேய்க்கும் பொழுது தன்னைப் போன்ற சிறுவர்கள் பள்ளிக்குப் போவதைப் பார்த்து தானும் பள்ளிக்குப் போக விரும்பினான். பாட்டியிடம் ஒரு நாள், "பாட்டி, நானும் படிக்க வேண்டும் பாட்டி" என்றான்.

பாட்டி பெருமூச்சு விட்டாள். நாமெல்லாம் படிக்க முடியாதுப்பா. அது பணக்காரங்களுக்குத்தான் முடியும்.

"ஏன் பாட்டி, நாம ஏன் படிக்கக் கூடாது?"

"நாம வேலை செய்துதான் சாப்பிட முடியும். படிக்கப் போயிட்டா யாரு சோறு போடுவாங்க? அதனால உழைக்கிறதுதான் நம்மளாலே முடியும்"

இதை நம்பியின் மனம் ஏற்கவில்லை. எப்படியாவது படித்தே தீருவது என்று முடிவு செய்தான். அந்த ஊரில் இருந்தது ஒரே பள்ளிக்கூடம். அதுவும் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே உள்ளது. ஒரு கூரைக் கட்டடத்தில் பள்ளி நடந்து வந்தது. நம்பி மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிவிட்டு பள்ளிக்கூடத்தின் வாசலில் அல்லது ஜன்னலின் ஓரத்தில் வந்து நின்று கொள்வான். மூன்று மாதங்கள் வரை முதல் வகுப்பிலும் அதன் பின் இரண்டாம் வகுப்பிலும் என இரண்டு வருடங்களுக்குள் ஐந்து வகுப்பின் பாடங்களையும் கற்றுக்கொண்டான்.

இப்போது நம்பி யார் துணையும் இல்லாமல் எல்லாப் புத்தகங்களையும் படிக்கத் தொடங்கினான். கண்ணில் கண்ட தாள்களில் உள்ள செய்திகளையெல்லாம் படித்துத் தெரிந்துகொண்டான். தான் படிப்பதை



யாரும் அறியாமல் இரகசியமாகவே வைத்திருந்தான். ஏனெனில் மாடு மேய்க்கும் சிறுவன் படிப்பதைப் பார்த்தால் ஊர்ப் பெரியவர்கள் தவறாக நினைப்பார்கள். அவன் சரியாக மாடுகளை மேய்க்கவில்லை எனக் கூறி கூலி தரமாட்டார்கள் எனப் பயந்திருந்தான்.

அந்தக் கிராமத்தில் வாரம் ஒருமுறைதான் தபால்காரர் வருவார். அவரும் ஊருக்கு வெளியே நம்பியைப் பார்த்தால் அவனிடம் இரண்டு அல்லது மூன்று கடிதங்களைக் கொடுத்துவிட்டு ஊருக்குள் வராமலேயே போய் விடுவார். அந்தக் கடிதங்களை நம்பி மாலையில் மாடுகளைக் கட்ட வரும்போது உரியவர்களிடம் சேர்த்து விடுவான்.

அன்றும் அதேபோல தபால்காரர் வந்தார். இரண்டு கடிதம்தான் இருக்கிறது. இதைத் தருவதற்காக ஊருக்குள் வரவேண்டுமா? என எண்ணி அதை வழக்கம்போல நம்பியிடம் கொடுத்துச் சென்றார். வெகுநேரம் கழித்து அந்தக் கடிதங்களைப் பார்த்தான் நம்பி. இப்போது நம்பிக்குத்தான் படிக்கத் தெரியுமே. அதனால் ஆர்வம் அவனை அந்தக் கடிதங்களைப் படிக்கத் தூண்டியது. மெதுவாகப் படிக்கத் தொடங்கினான்.

அந்தக் கிராமத்தின் தலைவர் பெரியசாமி. அவரது நண்பர் சுந்தரம் பட்டணத்தில் அரசாங்கத்தில் வேலை பார்ப்பவர். அவர் தான் பெரியசாமிக்குக் கடிதம் எழுதியிருந்தார். வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு அந்த ஊருக்கு அரசாங்க அதிகாரி வரப் போவதாக எழுதியிருந்தார். கடிதம் வந்து சேர்ந்தது வெள்ளிக் கிழமை.

அந்தக் கடிதம் உடனே கிராம அதிகாரியின் கைக்குப் போய்ச் சேர வேண்டுமே என முடிவு செய்தான் நம்பி.

உடனே தான் பாட்டி வேலை செய்யும் இடத்திற்குப் போனான். "பாட்டி, மாடுகளைக் கொஞ்ச நேரம் பார்த்துக்கொள். நான் இந்தக் கடிதாசியை நம்ம தலைவரய்யாகிட்டே குடுத்துட்டு வரேன்" என்றபடியே ஓடினான்.

கடிதத்தைப் படித்த பெரியசாமி உடனே அதிகாரியை வரவேற்க ஆவன செய்ய உத்தரவு பிறப்பித்தார். அன்று மாலை தலைவரை நல்ல முறையில் வரவேற்று உபசரித்தார். அதிகாரி மிகவும் மகிழ்ந்து அந்தக் கிராமத்திற்கு என்ன வசதிகள் தேவை என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அதை நிறைவேற்றக் கட்டளையிட்டார்.

இரவு நம்பியும் பாட்டியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது வீட்டு வாயிலில் யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

"யாரது?" எனக்கேட்டவாறே வெளியே வந்தனர் பாட்டியும் பேரனும்.

தொடரும்...

## 10.2017 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1147- முதலாம் அஃபொன்சோ தலைமையில் போர்த்துகீசர் லிஸ்பன் நகரைப் பிடித்தனர்.
- 1415- அஜின்கோர்ட் நகரில் இடம்பெற்ற போரில் இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றியின் படைகள் பிரான்சைத் தோற்கடித்தனர்.
- 1616- அவுஸ்திரேலியாவில் கால்பதித்த இரண்டாவது ஐரோப்பியர் டச்சு கப்டன் டேர்க் ஹார்ட்டொக். மேற்கு அவுஸ்திரேலியாவில் டேர்க் ஹார்ட்டொக் தீவு அவரது பெயரால் அழைக்கப்படுகிறது.
- 1760- மூன்றாம் ஜோர்ஜ் பெரிய பிரித்தானியாவின் மன்னனானான்.
- 1900- ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்வால் மாநிலத்தை இணைத்துக் கொண்டது.
- 1917- ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி (பழைய ஜூலியன் நாட்காட்டியின்படி) இடம்பெற்றது. போல்ஷெவிக்குகள் குளிர்கால அரண்மனையைக் கைப்பற்றினர்.
- 1918- அலாஸ்காவில் பிரின்சஸ் சோஃபியா என்ற கப்பல் மூழ்கியதில் 353 பேர் கொல்லப் பட்டனர்.
- 1924- இந்தியாவில் சுபாஷ் சந்திரபோஸ் பிரித்தானியரால் சிறைபிடிக்கப்பட்டார்.
- 1935-எயிட்டியில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1936- ஹிட்லர் மற்றும் முசோலினி இணைந்து ரோம்-பேர்லின் அச்சு என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தினர்.
- 1944- இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சில் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் வரலாற்றில் பெரும் கடற்சமர் இடம்பெற்றது.
- 1945- இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் கூட்டு நாடுகளிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து சீனக் குடியரசு தாய்வானை இணைத்துக் கொண்டது.
- 1971- ஐ.நாவிலிருந்து சீனக் குடியரசு வெளியேற்றப்பட்டு மக்கள் சீனக் குடியரசு ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1983- ஐக்கிய அமெரிக்காவும் அதன் கரிபியன் கூட்டு நாடுகளும் கிரெனாடாவை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றின.
- 1991- யூகொஸ்லாவிய இராணுவம் சிலவேனியாவில் இருந்து முற்றாக வெளியேறியது.
- 2000-பிந்துனுவேவா படுகொலைகள்: இலங்கையில் பண்டாரவளை, பிந்துனுவேவா சிறைகள் மீது சிங்களவர்கள் நடத்திய தாக்குதலில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.
- 2001- விண்டோஸ் எக்ஸ்பி வெளியிடப்பட்டது.
- 2007- சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முதலாவது இரட்டை அடுக்கு விமானம் ஏர் பஸ் ஏ380 தனது முதலாவது சேவையை சிட்னிக்கு ஆரம்பிக்கிறது.

### பிறப்புகள்

- 1806 -மக்சு இசுரேனர், செருமானிய மெய்யியலாளர் (இ. 1856)
- 1811 - எவரிஸ்ட் கால்வா, பிரான்சியக் கணிதவியலாளர் (இ. 1832)
- 1881- பாப்லோ பிக்காசோ, எசுப்பானிய ஓவியர் (இ. 1973)
- 1893 - செ. நாகலிங்கம், இலங்கை நீதிபதி (இ. 1958)
- 1953- வதிரி. சி. ரவீந்திரன், இலங்கை எழுத்தாளர்
- 1973 -றசல் பிரேமகுமாரன் ஆர்னோல்ட், இலங்கை துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

- 1400- ஜெஃப்ரி சாசர், ஆங்கிலேய மெய்யியலாளர் (பி. 1343)
- 1955- சடாகோ சசாகி, அணுகுண்டினால் பாதிப் படைந்த சிறுமியர் (பி. 1943)
- 1958 - செ. நாகலிங்கம், இலங்கை நீதிபதி (பி. 1958)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 170 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 500 | 500 |
| தக்காளி | 200 | 200 | 170 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 80 | 60 | 60 |
| கோவா | 150 | 100 | 140 | 120 | 140 |
| கரட் | 100 | 220 | 140 | 200 | 160 |
| பூசணி | 80 | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 100 | 120 | 80 | 120 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 160 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 250 | 300 | 240 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 160 | 160 | 130 |
| பாகற்காய் | 450 | 600 | 500 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | — | 100 | 80 |
| பயற்றங்காய் | 280 | 250 | 120 | 200 | 180 |
| லீக்ஸ் | 250 | 260 | 240 | 240 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 100 | 120 | 100 |
| கறிமிளகாய் | 300 | 200 | — | 280 | 250 |
| முருங்கைக்காய் | 600 | 300 | 400 | 300 | 400 |
| போஞ்சி | 250 | 250 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | — | 120 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 200 | 140 | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 85 | 100 | 75 | 60-80 | 90 |
| இராசவள்ளி | — | 500 | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | 250 | — | — | 250 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 50 | — | 60 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மானம், அறிவு, தன்னடக்கம் ஆகிய மூவகைப் பண்புகளும் ஒருவரது வாழ்வின் தலைசிறந்த ஆற்றல்கள்.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சூரசங்கார தத்துவத்தை தேர்தலில் காட்டி நிற்போம்

இன்று சூரன் போர். முருகப் பெருமானை வேண்டி ஆறுநாள் கந்த சஷ்டி விரதமிருந்த தன் பயனாக சூரனை அடக்க முருகப் பெருமான் திருவுளம் கொண்டார்.

மமதை கொண்ட சூரனுக்கு முருகப் பெருமான் தன் திருப்பெருவடிவத்தைக் காட்டுகிறார்.

எதிரிக்கும் தன் பலத்தைக் காட்டி அவனையும் திருத்த வேண்டும் என்பது தமிழரின் போர் ஒழுக்கம் என்பதால், போர் புரிவதற்காக தன் முன் நிற்கும் சூரனுக்கு முருகப் பெருமான் தன் திருப்பெரு வடிவத்தைக் காட்டினார் எனலாம்.

திருப்பெருவடிவம் கண்ட சூரன் திகைத்துப் போகிறான். முருகா! என்று கையெடுத்துக் கும்பிடுகிறான். இது அவனின் அகந்தையை விலக்குவதற்காக முருகன் செய்த திருவருள்.

எனினும் திருப்பெருவடிவம் மறைந்ததும் சூரன் மீண்டும் மமதைமிக்கவனாக போருக்குத் தயாராகிறான். போர் நடக்கிறது.

வைதாரையும் வாழ வைக்கும் முருகன் சூரனுடன் போர் புரிகிறான். தன்னுடன் போர் புரிந்தவனைக் கொல்லுதல் என்பது வெற்றி அன்று. மாறாக அவனை அடக்கி ஆளுதலே உண்மை வெற்றியாகும் என்ற தத்துவத்தின் பிரகாரம் முருகன் சூரனை அடக்கி தனக்கு மயில் வாகனமாகவும் வெற்றிக்குரிய சேவற் கொடியாகவும் ஆக்கி அவனுக்கும் அருள் புரிகிறார். இதுவே தமிழ்க் கடவுளாம் முருகனின் பேரருள்.

இராவணனுடன் போர் புரிந்த இராமன் கிருஷ்ண அவதாரம் என்று கூறப்படுகிறது. எனினும் யுத்தம் நடந்தபோது இராமபிரான் இராவணனைக் கொன்று விடுகிறார். இதுவே சூரன் போருக்கும், இராம – இராவண யுத்தத்துக்கும் உள்ள வித்தியாசம்.

இவை ஒரு தகவலுக்கானவை மட்டுமே. இப்போது நாம் இங்கு கவனிக்க வேண்டியதெல்லாம் சூரசங்காரம் என்று சொல்லுகின்ற சூரன் போரில் சூரன் கொல்லப்படவில்லை என்பதுதான்.

சூரன் கொல்லப்படாத நிலையில் சூரசங்காரம் என்று கூறுவது எந்தளவுக்கு பொருள் பிறழ்வு இல்லாதது என்ற கேள்வி எழும்.

அந்தக் கேள்வி எழுகின்றபோது சூரன் என்பது அசுரத்தனம், மமதை, ஆணவம் என்பவற்றைக் குறிக்கும் பொருளாகும்.

ஆக, சூரசங்காரத்தில் அசுரத்தனம், மமதை, ஆணவம் என்பன கொல்லப்பட்டு விடுகின்றன. அவை கொல்லப்பட்டதனால்தான் சூரனின் சூக்கும உடம்பு மயிலாகவும் சேவலாகவும் உருப்பெற்று முருகப் பெருமானுடன் சேர்ந்திருக்கும் பெரும் பேறு பெற்றது எனலாம்.

சூரனைச் சங்காரம் செய்து விடுவதால் எந்தப் பயனும் இல்லை. தீயவரேனும் அவர் திருத்தப்பட வேண்டும். அவருக்கும் நல்லருள் கிடைக்க வேண்டும்.

தீயவரை அழித்தல் என்பதே தர்மம் என்றால் வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும். இதனையே முருகப் பெருமான் நடத்திய சூரசங்காரம் நமக்கு உணர்த்தி நிற்கிறது.

இதற்கூடாக நாம் கற்றுக் கொள்வது தீயவர்கள், மமதை கொண்டவர் அடக்கப்பட வேண்டும். அவர்களை அடக்கி அவர்களுக்கு நல்லறிவு புகட்ட வேண்டும். அப்போதுதான் அவர்கள் தாம் விட்ட தவறை உணர்ந்து நல்வழிப்படுவர்.

இதை நாம் எழுதும் போது எதிர்வரும் ஜனவரியில் உள்ளூராட்சித் தேர்தல் நடக்கும் என்ற செய்தி வெளிவருகிறது.

ஆக, இன்றைய சூரன் போர் நாளில் நாமும் தேர்தல் மூலம் மமதையைப் போக்க உறுதி பூணுவோமாக.

யாழ். மேல் நீதிமன்று தீர்ப்பு

# மாமியார் வெட்டிக் கொலை; மனைவிக்கு வெட்டுக் காயம்

## ஏற்படுத்தியவருக்கு 8 ஆண்டு கடூழிய சிறை

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்தில் மாமியாரை வெட்டிக் கொலை செய்ததுடன், தனது மனைவியை கடும் காயங்களுக்கு உட்படுத்திய குடும்பஸ்தருக்கு 8 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும் ஆறாயிரம் ரூபாய் தண்டமும் விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றைய தினம் தீர்ப்பளித்துள்ளார்.

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்தில் வசித்து வந்த கணேசையா காந்தரூபன் என்ற குடும்பஸ்தர், கடந்த 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி தனது மாமியாரான யோகராசா சிவகலா (வயது-42) என்பவரை வெட்டிக் கொலை செய்ததாகவும், தனது மனைவியை கொலை செய்யும் நோக்குடன் கத்தியால் வெட்டி கடும் காயம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டு குறித்த நபர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மாமியாரை கொலை செய்தமை மற்றும் நிறைமாத கர்ப்பிணியாக இருந்த மனைவிக்கு கடும் காயம் விளைவித்ததாக இரு குற்றச்சாட்டுக்களை முன் வைத்து சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. எதிராளி தான் சுற்றவாளி என தெரிவித்ததை அடுத்து வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இடம் பெற்று வந்தன. விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

இரு குற்றச்சாட்டுக்களுக்கும் எதிரி குற்றவாளியாக இனங்காணப்பட்ட போதிலும் எதிரி தரப்பு சட்டத்தரணி மு.றெமிடியஸ், குறித்த நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும், இந்த கொலை செய்தது அவருக்கே தெரியாது என்று இது திட்டமிட்டு செய்யவில்லை என மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது. மேலும் குறித்த நபரின் குடும்ப நலனை கருத்தில் கொள்ளும்படியும் பிள்ளையின் எதிர்காலத்தை கருத்திலெடுக்குமாறு கோரியிருந்தார்.

குறித்த விண்ணப்பத்தையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்த நீதிபதி அவரது முதலாவது குற்றமான கொலைக் குற்றத்தை, இவர் குறித்த கொலையை திட்டமிட்டு மேற்கொள்ளவில்லை என்பதால் அதை ஆட்கொலை குற்றச்சாட்டாக மாற்றியதுடன், இவர் திட்டமிட்டு இக் குற்றத்தை செய்யாவிட்டாலும், குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளமையால் குற்றவாளியாக மன்று தீர்ப்பளித்தது.

அந்த வகையில், ஆக குறைந்த தண்டனையாக முதலாவது குற்றமான கொலைக் குற்றத்துக்கு 7 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் 3 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் கட்டத்தவறும் பட்சத்தில் ஒரு மாதகால சிறை தண்டனையும் வழங்கியதுடன், அவரது இரண்டாவது குற்றமான கடும் காயம் விளைவித்த குற்றத் துக்கு ஓர் ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனையும் 3 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும், கட்டத் தவறும் பட்சத்தில் ஒரு மாதகால சிறைத் தண்டனையும் வழங்கப்படும் என நீதிபதியால் தீர்ப் பளிக்கப்பட்டது. (மு-9)

9 மாதங்களைக் கடந்து தொடரும்

# நிலமீட்புப் போராட்டம்

(பனிக்கன்குளம்)

இறுதிக்கட்ட யுத்தம் நிறைவடைந்து எட்டு வருடங்கள் கடந்தும் பூர்வீக நிலத்தை மீட்பதற்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வரும் மக்களின் போராட்டம் இன்றுடன் 238 நாட்களை எட்டியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கேப்பாபுலவின் பூர்வீக நிலத்தின் ஒரு பகுதியான புலவுக்குடியிருப்பு நிலத்தை தொடர் போராட்டத்தின் மூலம் பெற்று புலவுக்குடியிருப்பு மக்கள் சொந்த நிலத்தில் கால்பதித்த அன்றைய தினம் கேப்பாபுலவு மக்கள் சொந்த நிலத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

மழை மற்றும் வெயிலுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் போராட்டம் ஒன்பது மாதங்களை எட்டவுள்ளது.

எனினும் மக்களின் போராட்டத்திற்கு இதுவரை தீர்வுகள் எவையும் முன்வைக்கப்படவில்லை. 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறே குறித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்று வருகின்றது. (மு-281)

# இலக்கிய மாத போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார அதிகாரசபையின் கலை கலாசார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 'இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை முன்னிலைப்படுத்துவோம்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இலக்கிய மாத போட்டி முடிவுகள் வருமாறு.

**கலைஞர்களுக்கான பேச்சுப்போட்டி (திறந்த) முடிவுகள்**

முதலாம் இடம் ஸ்ரீஸ்கந்தராசா சிவஸ்கந்தஸ்ரீ (யாழ். சிவன் பண்ணை வீதி). இரண்டாமிடம் இ. ஜான்சி (கொழும்புத்துறை). மூன்றாமிடம் ஜோர்ச் ஜெஸ்ரின் (கொழும்புத்துறை). மற்றும் வி.ஜோண் கலிஸ்ரஸ் (குருநகர்).

**பாடசாலை மாணவர்களுக்கான பட்டி மன்றப் போட்டி முடிவுகள்**

முதலாம் இடம் புனித பரியோவான் கல்லூரி. இரண்டாம் இடம் யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்.

**முன்பள்ளி மாணவர்களுக்கான ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் மனனப் போட்டி முடிவுகள**

முதலாம் இடம் பிரபாகர மூர்த்தி பவகரன் (கைலாச விநாயகர் பாலர் பாடசாலை). இரண்டாம் இடம் தோமஸ் எடிசன் நியோமி (திருத்துவ சின்னஞ்சிறுசுகள் பாலர் பாடசாலை. மூன்றாம் இடம் கோ.எரிக்கா (திருத்துவ சின்னஞ்சிறுசுகள் பாலர் பாடசாலை) மற்றும் பாஸ்கரன் கேனுஜா (அறிவொளி முன்பள்ளி) என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

124



வைகுந்தவாசன் தன் மலர் மார்பின் இரு பக்கங்களிலும் இரு தேவியரையும் தாங்கினான்.

அன்றிலிருந்து தன்னை ஆராதித்து வருபவர்களுக்கு எல்லாம் அருள்பாலிக்கத் தொடங்கினாள்.

ஆண்டவன் நாராயணன் ஆட்சி செய்யும் மலை பாவங்களை எல்லாம் பறந்தோட வைக்கும் வல்லமை வாய்ந்தது. அதனாலேயே வேங்கடாசலம் என அறியப்பட்டது. (வேங்கடாசலம் என்றால் பாவங்களைக் கொளுத்தும் மலை எனப் பொருள்படும்.) (தொடரும்)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## பொறுமைக்கு அழிவில்லை



✦ பொறுமை மனிதர்கள் அனைவருக்கும் அவசியமானது. பொறுமையுள்ளவனுக்கு என்றுமே அழிவு உண்டாகாது.

✦ கடவுள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வந்து விட்டால் வாழ்வில் துன்பம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

✦ பண ஆசையால் அலையும் கருமி போல கடவுள் மீது ஆசை கொண்டு அலைந்தால் அவனருள் கிடைக்கும்.

✦ [illegible] உள்ளவனுக்கு அனைத்தும் எளிதாக [illegible]

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

இறை அருள்



**கர்ப்பதானம் என்பதன் விளக்கம் என்ன?**

பெண் ருதுவாகி ஒரு சில வருடங்கள் கழித்து திருமணமாகி கணவனால் கிடைக்கும் பாக்கியம் கர்ப்பதானமாகும். (தொடரும்)

# உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

அறியப்பட்டுள்ள எல்லாப் புற்றுநோய்களிலும் அதிகளவு உயிரிழப்பை ஏற்படுத்துவதில் மார்பக புற்றுநோயே முன்னணி வகிக்கின்றது. இந்நிலையை மாற்றுவதற்கும் மார்பக புற்றுநோயினை மிக ஆரம்பத்திலேயே கண்டு பிடிப்பதற்கும் சிறந்த சிகிச்சை முறைகளை பெற்றுக் கொடுப்பதற்கான கட்டமைப்பை பலப்படுத்துவோம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.

யாழ்ப்பாணம் மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரை இறுதிக்கு முன்னேறியது மணற்காடு சென்.அன்ரனிஸ்





மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவான 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்காக நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் 23 ஆம் திகதி நடை பெற்ற இரண்டாவது போட்டியில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.சென்.அன்ரனிஸ் சார்பாக நிமால்-4, யோச்ஜெயசீலன்-1 கோல் போட்டனர். போட்டியின் ஆட்டநாயகனாக சென்.அன்ரனிஸ் வீரர்நிமால்தெரிவு செய்யப்பட்டார். (க)

# வடமாகாணம் முதல் தடவையாக 8 ஆவது இடத்திற்கு முன்னேறியது

கடந்த ஒரு மாதமாக மாத்தறையில் இடம்பெற்று வந்த 43 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் நிறைவடைந்த போட்டிகள் உட்பட வடமாகாணத்தின் வீரர்களும் வீராங்கனைகளும் சேர்ந்து 6 தங்கப் பதக்கங்கள், 13 வெண்கலப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள் உட்பட 21 பதக்கங்களைப் பெற்று எட்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

வடக்கு மாகாணம் உருவாகிய காலத்தில் இருந்து விளையாட்டுத் துறையில் ஒன்பதாவது மாகாணமாக இருந்து வந்த நிலையில் விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்களின் வழிநடத்தலில் இம்முறை வடமாகாணம் எட்டாவது இடத்திற்கு வந்து சாதனை படைத்துள்ளது.

இந்நிகழ்வுகளில் வடமாகாண வீராங்கனையான ஜே.அனிதா கோலூன்றிப் பாய்தலில் 3.48 மீற்றர் உயரம் பாய்ந்து ஏற்கனவே இலங்கை பெற்றிருந்த தனது சாதனையைத் தானே முறியடித்து புதிய சாதனையைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றெடுத்துள்ளார்.

தேசிய விளையாட்டு விழாவின் போட்டிகளில் 13 பதக்கங்களை வென்றெடுத்து வடமாகாணத்திற்குப் பெருமை சேர்த்துள்ள வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள், அலுவலர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். (க)

# தெல்லிப்பழை மகாஜனவை வென்றது சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நடைபெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் சென்.ஜோன்ஸின் சார்பா[illegible] இரண்டு கோல்கள் பதிவாகின.

பவிந்தன், அச்சேயன் இருவரும் இந்தக் கோல்களைப் பதிவு செய்தனர்.

முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (க)

# சென்றலைட்ஸ் மூன்றாமிடம் பெற்றது

வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த இருபது - 20 போட்டியில் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை வீழ்த்தி சென்றலைட்ஸ் அணி மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியானது அவரது குடும்பத்தினரது அனுசரணையில் நடைபெற்றது. இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றின.

இந்தச் சுற்றுப்போட்டியின் மூன்றாமிடத்துக்கான ஆட்டம் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற அரியாலை ஐக்கிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி, ஜூலியஸ் கலிஸ்ரனின் துடுப்பாட்டத்தால் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜூலியஸ் கலிஸ்ரன் 49, அலன்ராஜ் 34, செல்ரன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும், டர்வின் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் அரியாலை ஐக்கியம் அணி சார்பாக ஜனன் 2, ஜரசன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.




183 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலளித்தாடிய அரியாலை ஐக்கிய அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து, 145 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் கிருபாகரன் 53 ஓட்டங்களையும் பிரிசங்கர் 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் ஜெரிக்துசாந்த் 4 ஓவர்களின் 25 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்களையும் கைப்பற்றினார். (க)

# இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது மனோகரா விளையாட்டுக் கழகம்



மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் 23 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அண்ணாசிலையடி விளை யாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டத்தில் மனோகரா 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

போட்டியில் ஆட்டநாயகனாக மனோகரா வீரர் கருணாகரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# மாவட்ட சுற்றுக்கு தெரிவாகியது குப்பிளான் குறிஞ்சிக்குமரன் வி.க



மைலோ கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் 23 ஆம் திகதி நடைபெற்ற வலிகாமம் லீக் A குழுவின் இறுதிப் போட்டியில் விளான் சென்.அன்ரனிஸ் அணியை 02:02 என சமன்செய்து சமநிலை தகர்ப்பில் 04:02 என்ற கணக்கில் வெற்றி கொண்டு மாவட்ட சுற்றுக்கு தெரிவாகியது குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழகம். (க)

# மத்திய கல்லூரி போராடி வெற்றி

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் இடம்பெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி போராடி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய கல்லூரி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் மத்தியின் சார்பாக அபிசன் ஒரு கோலைப் பதிவு செய்தார்.

அந்தக் கோலே ஆட்டத்தின் இறுதிக் கோலுமாக அமைய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாநாயக்கர்களை...

குறித்த அரசியல் யாப்புத் தயாரிப்புப் பணிகளை கைவிடுமாறு அரசாங்கத்திற்கு உத்தரவிட்டுள்ள நிலையிலேயே, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கின்றனர்.

இந்தத் தகவலை கூட்டமைப்பின் பேச்சாளரான யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

உத்தேச அரசியல் யாப்புத் தொடர்பில் மகாநாயக்க தேரர்களால் கூறப்பட்டதாக தெரிவிக்கப்படும் அறிவிப்புக்கள் குறித்து அரசாங்கத்தின் பல்வேறு தரப்பினரும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துவரும் நிலையில், அவற்றின் உண்மைத் தன்மைகள் குறித்து அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரான தமக்கு இருப்பதால் மகாநாயக்க தேரர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாட தீர்மானித்துள்ளதாக சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த மக்களின் மதத் தலைவர்களான மகாநாயக்க தேரர்களுக்கு ஆட்சி குறித்தும் ஆட்சியாளர்கள் தொடர்பிலும் எந்தவொரு அறிவிப்புக்களையும் விடுப்பதற்கு அனைத்து உரிமைகளும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், எனினும் அவர்களால் வெளியிடப்படும் அறிக்கைகள் மற்றும் கருத்துக்களைப் பல்வேறுபட்ட தரப்பினர் திரிபுபடுத்தி பொது மக்களுக்கு எடுத்துச்செல்வது அநீதியான செயல் என்று கூறியுள்ளார்.

இதனாலேயே அனைத்து மகாநாயக்க தேரர்களையும் நேரில் சந்தித்து உத்தேச அரசியல் யாப்பு தொடர்பிலான அவர்களின் நிலைப்பாடுகளை அறிந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் உத்தேச அரசியல் யாப்பின் ...ாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் அதன் நியாயப்பாடுகள் தொடர்பில் மகாநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தவும் தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்ட சுமந்திரன், இதற்கமைய இந்த சந்திப்பின் பின்னர் பல்வேறு சந்தேகங்கள் தீர்க்கப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (மு-11)

## ஜனாதிபதி மைத்திரி...

பால சிறிசேன நேற்று இரவு கட்டார் பயணமாகியுள்ளார்.

இவ்விஜயத்தின்போது கட்டார் அரச தலைவர் மற்றும் அரசின் முக்கிய அதிகாரிகளை சந்திக்கவுள்ள ஜனாதிபதி மைத்திரி, இரு தரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

அத்தோடு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மென்மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையில் சில ஒப்பந்தங்களும் ...ச்சாத்திடப்படவுள்ளன.

இலங்கை பிரஜைகள் பலர் கட்டாரில் வாழ்ந்து வருவதோடு பெரும்பாலானோர் தொழில் நிமித்தம் அந்நாட்டில் வசிக்கின்றனர். இந்நிலையில் கட்டார் வாழ் இலங்கையர்களுடன் ஜனாதிபதி சந்திப்பொன்றையும் நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (மு-11)

## பொலிஸாரின் அசாதாரண...

தரணி மன்றில் தெரிவிக்கையில், சட்டம் ஒருவரை திருத்துவதற்கு பயன்பட வேண்டும், ஆனால் ஒருவரை மன உளைச்சலுக்கோ குற்றம் செய்ய தூண்டுவதற்கோ பயன்படகூடாது. பொலிஸார் இளைஞர்களை குற்றம் செய்ய தூண்டும் அளவு செயற்பாடுகளை செய்கிறார்கள். மன்று அதை கவனத்தில் கொள்ள வேண்டும். கைக்குண்டு வைத்திருக்காமல் கைக்குண்டை வைத்திருந்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

ஏதோ ஒரு வழக்குக்கு கைது செய்து விட்டு பல வழக்குகளை தாக்கல் செய்கிறார்கள். இது இளைஞர்களை விரக்திக்கு உட்படுத்துகிறது என தெரிவித்தார். அதே நேரம் மேலும் ஒரு சட்டத்தரணி எழுந்து மன்றில் தெரிவிக்கையில்

சந்தேக நபர்களுடனும் குற்றம் செய்தவர்களுடனும் பொரிஸார் நண்பர்களாக சுற்றி திரிகிறார்கள். பொலிஸார் உண்மையான பல குற்றவாழிகளை ஒழித்தும் வைத்துள்ளார்கள். இது தொடர்பாக நீதவான் நீதிமன்றில் முறையிட்டுள்ளோம்.

பொலிஸார் மத்தியில் சமூகத்துக்கு மதிப்பு வர வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மதிப்பை இழக்க செய்கின்றன. இல்லாத குழுக்களை உருவாக்கி அவர்களை பெரிய கதாநாயகர்கள் ஆக்கி குற்றச்செயல்களுக்கு தூண்டுகிறார்கள் என குற்றம் சாட்டியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த நீதிபதி, தண்டனைகள் அதிகரித்தால் மட்டுமே குற்றச்செயல் குறைவடையும். தற்போது நீதிமன்றங்கள் மேல் அச்சம் குறைந்துள்ளது. இதை முடிவுக்கு கொண்டுவர தண்டனைகள் அதிகரிக்கப்பட வேண்டும். சட்டத்தரணிகளும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். கைது செய்பவர்களை பிணையில் எடுத்து விட்டால் குற்றங்கள் குறையாது அதிகரித்து தான் செல்லும் என தெரிவித்தார். (மு-9)

## எத்தடைகள் வந்தாலும்...

ச்சர் டிலான் பெரேரா சூளுரைத்துள்ளார்.

உத்தேச அரசியல் யாப்பைக் கைவிடுமாறு சிங்கள பௌத்த மதத் தலைமை பீடங்கள், தேசிய அரசாங்கத்திற்கு உத்தர விட்டுள்ள நிலையிலேயே இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

பௌத்த பீடங்கள் மற்றும் மகிந்த அணியின் எதிர்மறை உத்தேச அரசியல் யாப்புத் தயாரிப்புப் பணிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில், தற்போதைய அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா, உத்தேச அரசியல் யாப்பை தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துவோம் என சூளுரைத்திருக்கின்றார்.

உத்தேச அரசியல் யாப்பினால் நாடு ஒருபோதும் பிளவுபடாது என்று தெரிவித்திருக்கும் அமைச்சர் பெரேரா, நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு கண்டு நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு உத்தேச அரசியல் யாப்பின் அவசியம் இன்றியமையாதது என்றும் வலியுறுத்திக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதனால் எந்தத் தடைகள் வந்தாலும் உத்தேச அரசியல் யாப்பை முழுமையாகத் தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் டிலான் பெரேரா மேலும் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை உத்தேச அரசியல் யாப்பின் ஊடாக மத்திய அரசாங்கத்தின் கீழ் நேரடியாக எந்தவொரு பணிகளையும் மாகாண சபைகளுக்குள் நடைமுறைப்படுத்தக்கூடிய வகையிலான அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்படும் வகையிலேயே மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும் சுகாதார அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்திருக்கின்றார். (மு-11)

## ஜனாதிபதி 27...

தெரிவித்துள்ளார்.

குறித்த வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியாகும் எனவும் இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் 27ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 27ஆம் திகதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மனோ கணேசனும் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தும் தினம் குறித்து இழுபறி நிலை தொடர்ந்துவந்த நிலையில், அதற்குத் தீர்வுகாணும் வகையில் இந்தத் திகதியில் நடத்த கட்சித் தலைவர்கள் சம்மதித்துள்ளனர்.

முன்னதாக, தேர்தலை ஜனவரி மாதம் நடத்துவதெனத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் திகதி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மு-11)

## மகிந்த ஆதரவு அணி...

அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் தீயிட்டு எரித்தது.

இந்த நிலையில் 2017இல் மகிந்த ராஜபக்ஷ அணி இடைக்கால அறிக்கையை தீயிட்டு எரித்து எதிர்ப்பை வெளியிட்டால், தமிழர்கள் விடயத்தில் பெரும்பான்மை ஆட்சிகளின் இனவாத போக்கு என்றுமே மாறாதது தான் என்பதே வெளிப்படும்.

அத்துடன் பௌத்த பீடங்கள், பௌத்த பிக்குகள் புதிய அரசியல் அமைப்பு தேவையில்லை என்ற நிலைப்பாட்டையே எடுத்து வருகின்றன. இதன் தொடர்ச்சியாக அரசியல் அமைப்பு ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு 2/3 பெரும்பான்மை பலம் கிடையாது எனவும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு செல்ல வேண்டி வரும் எனவும் பேராசிரியர் விமலரத்தின தேரர் கூறியுள்ளார்.

அவ்வாறு சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டி வந்தால் அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரத்தில் தாம் இறங்கிப் பணியாற்றுவோம் எனவும் இதன்மூலம் புதிய அரசியல் அமைப்பை தோற்கடிப்போம் எனவும் சூழுரைத்துள்ளார்.

இவ்வாறிருக்கையில்,

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதுவுமே இல்லாத இடைக்கால அறிக்கையை எதிர்க் கட்சிகள் கடுமையாக எதிர்க்கும்போது சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் ஆதரித்துப் பேசவுள்ளமை வேடிக்கையான அரசியல் என்றும் அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமிழ் மக்கள் பேரவை, யாழ்.பல் கலைக் கழக கல்விச் சமூகம், மற்றும் பொது அமைப்புகள் இடைக்கால அறிக்கையை முற்று முழுதாக நிராகரித்துள்ளன. மகாநாயக்கத் தேரர்கள் புதிய யாப்பு அவசியம் இல்லையென்று கூறியுள்ளனர். இந்த நிலையில் இடைக்கால அறிக்கை தொடர்பாக விவாதம் நடைபெறவுள்ளது.

அத்துடன் அரசியல் அமைப்பு சட்டம் நிறைவேற்றப்படும் தினத்துக்கு முதல்நாள் நாடாளுமன்றத்திற்கு மேலே சென்று குண்டு ஒன்றை போட்டாவது அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என விமல் வீரவன்ச எம்.பி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (மு-11)

# தனியார் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்த 10 பேருக்கு கிருமித் தொற்று

## அனைவரும் யாழ்.போதனாவுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை கண் சத்திர சிக்சை செய்துகொண்ட 10 பேருக்கு அன்றிரவே ஏற்பட்ட தொற்றால் கண் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கண் பாதிக்கப்பட்ட 10 பேர் தனியார் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்வதற்கு பதிவு செய்துள்ளனர். அவர்களுக்கு கடந்த சனிக்கிழமை கண் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. அவர்கள் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியதும் அன்றிரவே தொற்றுக் காரணமாக சத்திரசிகிச்சை செய்த கண்ணில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அவர்கள் தனியார் வைத்தியசாலையைத் தொடர்பு கொண்டு தமது பிரச்சினையைத் தெரிவித்துள்ளனர். அவர்களை ஞாயிற்றுக்கிழமை நேரில் வருகைதருமாறு தனியார் வைத்தியசாலையினர் அழைத்திருந்தனர்.

இந்த நிலையில் அவர்கள் 10 பேரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் விடுதியில் தங்கவைத்து மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (மு-11)

# விமலுக்கு திடீரென மாரடைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று மாலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்திப்பதற்காக விமல் வீரவன்ச அவரது வீட்டிற்கு சென்றுள்ளார்.

அங்கு திட்டமிடப்பட்டுள்ள அரசியலமைப்பு தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது திடீரென விமல் வீரவன்ச நெஞ்சில் கை வைத்தவாறு கீழ் அமர்ந்துள்ளார். அங்கிருந்தவர்கள் உடனடியாக அவரை நவலோக வைத்தியசாலைக்கு அழைத்து சென்றுள்ளனர். அத்துடன் அவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு-11)

# ஆயுதம் தேடும் பணி தோல்வி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை பாடசாலைக்கு முன்பாக விடுதலை புலிகளால் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் இடத்தில் ஆயுதம் இருப்பதாக தெரிவித்து நீதிமன்ற அனுமதியுடன் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றின் நீதிபதி எஸ்.எம்.எஸ் சம்சுதீன் முன்னிலையில் கனரக வாகனத்தை பயன்படுத்தி விஷேட அதிரடிப்படையினரும், விமானப்படை, இராணுவம், பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று மாலை இரண்டு முப்பது மணிக்கு ஆரம்பமான தோண்டும் பணியில் எதுவும் கிடைக்காத நிலையில் தோல்வியில் கைவிடப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் இவ்வாறான தோண்டும் பணிகள் இடம் பெற்று வருகின்றபோதும் ஒவ்வொரு முயற்சியும் தோல்வியிலேயே முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-281)

## பனை மரம் ஏறியவர் விழுந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கள்ளு எடுப்பதற்காக பனை மரம் ஏறியவர் கீழே விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 6.00 மணியளவில் சண்டிலிப்பாய் கட்டுடை பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் சண்டிலிப்பாய் கட்டுடை பகுதியை சேர்ந்த பரராயசிங்கம் பார்த்தீபன் (வயது 45) என்பவரே காயமடைந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

## பஸ்-மோ.சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மற்றும் தனியாருக்கு சொந்தமான பஸ் ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் முழங்காவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் மன்னார் பகுதியை சேர்ந்த நாகலிங்கம் ரவி (வயது 34) மற்றும் முழங்காவில் பகுதியைச் சேர்ந்த செல்லையா சிவகுமார் (வயது 42) என்பவர்களே படுகாயமடைந்தவர்களாவார்.

இவ்விபத்து தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்
வலம்புரி

## இந்து ஆலயங்களில்...

பிரதேச சபைகளால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு மிருகங்கள் வதைக்கப்படுவதுடன் பலியிடப்படுகிறது. இதற்கு உரியவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே கோவில்களில் மிருகவதை இடம்பெறுவதற்கு தடையீட்டு எழுத்தாணை கோரி அகில இலங்கை சைவ மகாசபை சட்டத்தரணி மணிவண்ணன் ஊடாக யாழ் மேல் நீதிமன்றில் பொதுநல வழக்காக கடந்த 2015 ஆம் ஆண்டு மனுதாக்கல் செய்யப்பட்டது.

மன்று அதை பரிசீலித்த பின்னர் கடந்த 2016.04.01 தொடக்கம், 2016.04.20 வரை இடைக்கால் தடை யாழ் மேல் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டது. பின்னர் கால ஓட்டத்தில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் கவுணாவத்தை நரசிம்மர் ஆலய நிர்வாகத்தினர் குறித்த வழக்கில் இடைபுகு மனுதாரராக விண்ணப்பம் செய்ததையடுத்து இணைக்கப்பட்டனர்.

அவர்கள் 300 ஆண்டுகள் பாரம்பரியமான சமயநிகழ்வு என்றும் மத அனுஷ்டானத்தின் படி வேள்வி பூசை நடைபெறுகிறது. அதை நிறுத்துவது சட்டப்படி தவறு. இது மத உரிமை. எனவே வேள்வி நடத்த அனுமதி தந்து இவ் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என மன்றில் எழுத்துமூல சமர்ப்பணம் செய்தனர்.

நீதிபதி இவ் வழக்கை ஆய்வு செய்ததன் அடிப்படையில், நேற்றைய தினம் தீர்ப்பை அறிவித்திருந்தார்

மிருக பலி நடவடிக்கை தொடர்பாக தடையாணை கோரப்பட்டது. மிருக பலி அனுமதிக்கப்படவேண்டும் என்பதற்காக இறைச்சிக்கடை சட்டத்தை முன்வைத்து சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இது ஒரு துர்ப்பாக்கிய நிலை. இறைச்சிக்கடை சட்டத்துக்கும் இந்து சமய நிகழ்வுக்கும் என்ன சம்பந்தம் உள்ளது.

சைவ கோவில்களில் இறைச்சிக்கடை நடத்த யாரும் அனுமதி கோர முடியாது. மக்கள் முன் வேள்வி நடத்த பிரதேச சபை அனுமதி வழங்க முடியாது. நீதிமன்ற தீர்ப்பை பிழையாக விளங்கி பிரதேச சபை செயலாளர்கள் சிலர் தான் தோன்றி தனமாக அனுமதி கடிதம் வழங்கியுள்ளனர். தமக்கு அதிகாரம் உள்ளது என அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளனர். மேலும் மிருக பலியிடுதலுக்கு அனுமதி வழங்க எந்த நீதவானுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அனுமதி கொடுத்தவர்கள் மிருக பலிக்கு உதவியாக இருந்தார்கள் என்ற பெயரில் கைது செய்யப்பட வேண்டியவர்கள்.

பொது சமய விழாக்களில் பொதுமக்கள் முன்னிலையில் வேள்வி நடத்தி மிருக பலி இடுவதற்கு அனுமதி கோரலாமா? கோவில்கள் அனுமதி கோர முடியாது. சமய நம்பிக்கை என கோரி அனுமதி கோருவது சட்டத்துக்கு முரணானது. மன்னர் ஆட்சி காலத்தில் இவ்வாறான சமய நம்பிக்கை இருந்தது உண்மை. அப்போது தனிஒருவரே முடிவுகளை எடுத்தார். ஆனால் தற்போது ஜனநாயக ஆட்சி சட்டம் என்ன சொல்கிறதோ அதை தான் செய்ய வேண்டும்.

சில இடங்களில் வேள்வி இடம்பெற்ற பின்னர் இறைச்சி விற்பனை செய்யப்படுகிறது. விற்பதற்கு அனுமதி இல்லை. வியாபாரம் செய்யும் இடமாக கோவில்கள் கருதப்பட முடியாது. இதை மாபெரும் இறைச்சிக்கடையாக தான் மன்று கருதுகிறது. கோவில்களில் இருக்கும் பூசாரிக்கோ ஐயருக்கோ மிருகத்தை கொல்பவர்கள் என்ற பெயர் வரக்கூடாது.

எனவே யாழ் மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள இந்து ஆலயங்களில் வேள்வி பூசையின் போதும், கோவில்களில் மேற்கொள்ளப்படும் ஏனைய சமய நிகழ்வுகளிலும் மிருக பலி இடுவதற்கு முற்றான தடையாணை மன்றினால் பிறப்பிக்கப்படுகிறது. உள்ளூராட்சி சபை, பிரதேச சபைகள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருக்கு குறித்த வேள்வி நடத்துவதற்கு அனுமதி வழங்குவதற்கு தடை பிறப்பிக்கப்படுகிறது.

மேலும் இத் தடை உத்தரவினை மீறி எவராவது மிருக பலியிடலை மேற்கொண்டால், அது தொடர்பாக ஒரு பொதுமகன் வழக்கு தாக்கல் செய்தாலோ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தாலும் அது தொடர்பாக உடனடியாக விசாரணை செய்து குற்றச் செயலை புரிந்தவர்களை கைதுசெய்து அருகிலுள்ள நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு கட்டளை வழங்கியிருந்தார். மேலும் வேள்வி பூசையின் போது மிருக பலியிடுதலுக்கு தடையாணை பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தீர்ப்பிடப்பட்ட முதல் வழக்கு இத்வாகும் என நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார். (மு-9)

## ஒரு மாதம் கடந்த...

சாலைக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் உணவு தவிர்ப்பை ஆரம்பித்து இன்றுடன் ஒரு மாதம் நிறைவடைகிறது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள 3 தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்கு வவுனியா அல்லது யாழ்ப்பாண நீதிமன்றங்களில் நடைபெற வேண்டும் என கோரி கடந்த மாதம் 25 ஆம் திகதியில் இருந்து இன்று வரை உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் உடல் நிலை மிகவும் மோசமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்

நேற்று இவர்களுக்கு அநுராதபுரம் நீதிமன்றில் வழக்கு நடைபெற்றது. அங்கு அழைத்துச்செல்லப்பட்ட அவர்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்ததால் நீதிமன்றில் இருந்து நேரடியாக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் கைதிகளின் உறவுகளும் பல்கலைக்கழக மாணவர்களும் அண்மையில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இன்று தீர்வை தருவதாக ஜனாதிபதி உறுதியளித்ததாக கலந்துரையாடல் மேற்கொண்ட தரப்புகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-9)

It is never too Late to Learn to be a good inveitor
பங்குச் சந்தை முதலீட்டு ஆர்வலர்களுக்கான கருத்தரங்கு.
காலம் : 29.10.2017
நேரம் : 4.30 pm
CSE Jaffna
COLOMBO STOCK EXCHANGE
247, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம். (சத்திரச்சந்தி)
தொடர்பு: 0777822014
(C-164)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வேலைவாய்ப்பு
சர்வதேச ரீதியாக இயங்கிவரும் எமது நிறுவனத்தில் இணைந்திட ஓர் அரிய வாய்ப்பு. 15 வெற்றிடங்களுக்கான நேர்முகத் தேர்வு ஆரம்பமாகியுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
நிறுவனம் : Optimo international Branch
தகைமைகள் : O/L - 6பாட சித்தி மற்றும் A/L
18 - 30 வயதெல்லை
ஆண், பெண் இருபாலாரும்
இறுதித் திகதி: 30.10.2017
தொடர்பு: 0776048878 (உள்மாவட்டத்தினர்)
0771056848 (வெளிமாவட்டத்தினர்)
(1130)

ஏலவிற்பனை
யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலையில் பழுதடைந்த ஊஞ்சல் பாகம் எதிர்வரும் 08.11.2017 புதன்கிழமை அன்று முற்பகல் 10 மணியளவில் பாடசாலை வளாகத்தில் ஏலத்தில் விடப்படும்.
-அதிபர்

அமெரிக்க லொத்தர் விசா
இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா(Green Card)
18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்
திருமணமானவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்
இவ்வருடம் 55000 பேருக்கான வாய்ப்பு
யாழ்ப்பாணம் / வேலணை / கிளிநொச்சி
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
(அ-58)

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம், மிருகசீரிடம் - 4, 1987 இல் பிறந்த, சூரியன் செவ்வாய் 11இல், கிரகபாவம் 25, தனியார் நிறுவனத்தின் உரிமையாளருக்கு பொருத்தமான மணமகள் தேவை, செவ்வாய் தோஷம் இல்லாத ஜாதகங்களும் பரிசீலிக்கப்படும்.
தொடர்பு: 0212213043, 0714865923
(1129)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-055)
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

SB Travels and Tours Pvt Ltd
No.212 கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள SB Travels and Tours Pvt Ltd இல் ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமான பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் இந்தியாவுக்கு Budjet Airlinesகளில் மதுரை 22000இல் இருந்தும் சென்னை 23500இல் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
(C-158)
021 222 8555, 222 9555,
076 691 1080,81,82,83, 077 711 1228

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145
077 2931062
follow us : cnrworldwideexpress
(அ-149)

அமெரிக்க லொத்தர் விசா
மிகக் குறைந்த கட்டணத்தில் நேர்த்தியான முறையில் அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.
செல்வா கொமினிகேசன்
124, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5169
(1084)

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
0768226243
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.
2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்

திருச்செல்வம்-மரியரோகினி
அமெரிக்க விசா வெற்றியாளர்
(அ-055)
இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
V2 TRAVELS
யாழ்ப்பாணம் #49A 0768226241 | கிளிநொச்சி 0768226240 | சாவகச்சேரி 10,பேருந்து நிலையம் 0768226242 | நெல்லியடி முடக்காட்டு சந்தி 0776699892 | பருத்தித்துறை 324,யாழ் பிரதான வீதி 0768226230 | வல்வெட்டித்துறை யாழ் வீதி,வல்வெட்டி 0776697960

புதிய பிரிவுகள் ஆரம்பம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் வெளிவாரி விரிவுரைகள்
ஆரம்பம் : 28.10.2017
மெய்யியல் : கலாநிதி யுகபாலசிங்கம்
அரசியல்:திரு.பொன்.சந்துருBA (Hons), MEd
தமிழ் : திரு.N.பரன் BA (Hons), M.Phil (Tamil)
இந்துநாகரிகம் : திரு.P.சந்திரன் BA (Hons), MA
புவியியல் : திரு.PSV.டினேஸ் BA (Hons)
தனிப்பாடங்களுக்கும் அனுமதி வழங்கப்படும்
Further Details: Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382/ 0212229149
(C-053)

உயர் கலைக் கல்லூரி
(கொக்குவில், குளப்பிட்டிச் சந்தி அருகாமை)
கலை, கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப, வணிக மாணவர்களுக்கான
A/L - 2019, 2018
Day Class
புவியியல் : பிரபல ஆசிரியர் குமரன்
சித்திரம்: பிரபல ஆசிரியர் ஜெயந்தன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
விவசாய விஞ்ஞானம் : சாரங்கன்
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்: உமாகாந்தன் (யா/மத்திய கல்லூரி)
076 703 1337
(C-162)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org